# செந்தமிழ்

தொகுதி : 94 அக்டோபர் 2000 பகுதி : 10

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே. எஸ். டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு.எஸ். பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி (ஆசிரியர்)
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ.கந்தசாமி
டாக்டர். என். சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். சி.கதிர் மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணா மூர்த்தி
பேரறிஞர். எஸ்.எம். கமால்
பேரறிஞர். ஈ. கி. இராமசாமி
பேராசிரியர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 1000 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் **மா. தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# பொருளடக்கம்


1. **எல்லோர்க்கும் தொல்காப்பியம் ............................ ..... 343**
பேரறிஞர் நா. பாலுசாமி

2. **சிலப்பதிகாரத்தில் தோன்றும் முக்கியமான கதாபாத்திரங்கள் ............................ ...... 347**
பேரறிஞர் ந. சுப்பிரமணியன்

3. **திருமூலர் கூறும் சமுதாயத் தீர்வுகள் .................. ...... 355**
ஆய்வாளர் சா. நடராஜவேலு

4. **இடுக்கண் வருங்கால் நகுக ................................ ..... 361**
மோ.கோ. கோவைமணி

6. **புதுக்கவிதைகளில் பொருள் விளங்காமை ......... ..... 371**
பேரறிஞர் ஏ. ஆதித்தன்

7. **துங்கபுரக் கல்லெழுத்துக்கள் ............................ ..... 377**
பேரறிஞர் ஆர்.கே. அழகேசன்

8. **நூல் மதிப்புரை ............................................ 380**

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

-பேரறிஞர் நா. பாலுசாமி

## (எழுத்து - நூல் மரபு)

11. (மெய்யெழுத்தின் மாத்திரை)

**மெய்யின் அளவே அரைஎன மொழிப.**

**(ப-ரை)**

மெய்யெழுத்துக்களாகிய புள்ளி எழுத்துக்களின் தனித்தனி மாத்திரை ½ ஆகும்; அரை மாத்திரை அளவே ஒலிக்கும். (க்..........ன்)

12. (சார்பெழுத்தின் மாத்திரை)

**அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே**

**(ப-ரை)**

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்று சார்பெழுத்துக்களுக்கும் தனித்தனி மாத்திரை முன் மெய்யெழுத்துக்குக் கூறிய அரை அளவு ஆகும்; ஒவ்வொன்றும் அரை மாத்திரை ஒலிக்கும். (நாடு, எஃகு, கேண்மியா).

நாடு என்பதிலுள்ள 'உ'கரமும், கேண்மியா என்பதில் 'மி' மேல் பொருந்தி 'இ'கரமும், 'ஃ'ஆய்தமும் எடுத்துக்காட்டுகளாகும்.

13. (மகரக் குறுக்கம்)

**அரையளவு குறுகல் மகரம் உடைத்தே**
**இசையிடன் அருகும் தெரியும் காலை**

**(ப-ரை)**

இசை இடன் - மற்றோர் எழுத்தின் ஓசையிடத்து, மகரம் - மகர மெய்யெழுத்து, அரை அளவு - அரை மாத்திரையில், குறுகல் உடைத்து - குறுகிக் கால் மாத்திரை பெறும், தெரியும் கால் - ஆராயுமிடத்து, அருகும் - அது சிறுபான்மையாய் வரும்.

மகர மெய் (ம்) பிறிதோர் எழுத்தின் ஓசையோடு சேர்ந்து ஒலிக்கும்போது, தனக்குரிய அரைமாத்திரை ஒலிக்காது கால் மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும். இவ்வாறு வருதல் சிறுபான்மை.

இசை-ஓசை, எழுத்தின் ஓசை. அருகும் - அருமையாக வரும்.

(எ-டு)

போன்ம், சென்ம். இங்கு 'ன்' என்னும் மெய்யோலியொடு சேர்ந்து 'ம்' ஒலிப்பதால் அது கால் மாத்திரையே ஒலிக்கும்; தனக்குரிய அரைமாத்திரை ஒலிக்காது.

14. (வடிவம்)

**உட்பெறு புள்ளி உருவா கும்மே**

(ப-ரை)

உட்பெறு புள்ளி - மகரக் குறுக்கம் உள்ளே புள்ளி பெறுதல் உருவாகும் - அதன் வடிவமாகும்.

மகரம் தனது அரைமாத்திரையில் குறுகிக் கால் மாத்திரையாக ஒலித்து மகரக் குறுக்கம் ஆகும்போது, அதன் வடிவம் புறத்தே புள்ளி பெறுவதுடன் உள்ளேயும் புள்ளிபெற்று நிற்கும்.

(எ-டு)

ம் - இது மகரம் குறுகும்போது பெறும் வடிவம்; குறுகாதபோது 'ம்' என நிற்கும். இஃதே இரண்டினுக்கும் உள்ள வடிவ வேறுபாடு.

இனி, 'உட்பெறுபுள்ளி உருவாகும்' என்பதற்கு வெளியே புள்ளி பெறாமல் உள்ளே புள்ளி பெறுவது மகரக் குறுக்கத்தின் வடிவம் எனலும் ஆம். (எ-டு) ம - குறுக்கம்; ம - குறுகாமை. ம் - இன்று வழக்கில் இல்லை.

15. **மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்**

(ப-ரை)

மெய்யெழுத்தின் இயல்பு மேலே புள்ளி பெற்று வருவதாம்.

(எ-டு)

க் .......... ன்.

மெய்யெழுத்து புள்ளி எழுத்து எனவும் படும்.

16. **எகர ஒகரத்து இயற்கையும் அற்றே**

(ப-ரை)

எ, ஒ - இவ்விரண்டும் மெய்யெழுத்துப் போன்றே புள்ளிபெறும் என்பதாம்.

(எ-டு) எ,ஒ - இவ்விரண்டும் மெய்யெழுத்துப் போன்றே புள்ளிபெறும் என்பதாம்.

(எ-டு) எ், ஒ் என வரும் (இன்று வழங்கவில்லை)

இனி,

**இகர உகரத்து இயற்கையும் அற்றே**

என்று இருநூற்பாவை அமைத்துக் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், மெய்யெழுத்துப் போன்றே புள்ளி பெறுவனவாம் என்பர் ஒருசார் அறிஞர். இப்பாடம் மிகவும் பொருத்தமானது. ஏனெனில், இகரமும் உகரமும் குறுகி ஒலிக்கும்போது வடிவ வேறுபாடு கொள்ளுதல் வேண்டும்; இ - ஒரு மாத்திரை (உயிர்குறில்); உ - ஒரு மாத்திரை (உயிர்க்குறில்) இ - குற்றியல் இகரம் அரை மாத்திரை, உ - குற்றியல் உகரம் அரை மாத்திரை.

**17. புள்ளி இல்லா எல்லா மெய்யும்**
**உருவுரு வாகி அகரமொடு உயிர்த்தலும்**
**ஏனை உயிரொடு உருவுதிரிந்து உயிர்த்தலும்**
**ஆயீரியல உயிர்த்த லாறே.**

**(ப-ரை)**

புள்ளி இல்லா - மேலே புள்ளி பெறாத, எல்லா மெய்யும் - எல்லா மெய் எழுத்துக்களும், உருவுஉருவு ஆகி - அகரம் நீங்கிய தத்தம் வடிவங்களே வடிவங்களாகி நின்று, ஒலியோடு வெளிப்படும்போது, அகரமொடு உயிர்த்தலும் - அகர உயிரைத் துணையாக் கொண்டு தம் வடிவங்கள் மாறாமல் உயிர்த்தலும், ஏனை உயிரோடு - பிற பதினோர் உயிர் எழுத்துக்களைத் துணைக்கொண்டு, உருவு திரிந்து உயிர்த்தலும் - தம் வடிவங்கள் சிறிது மாறுபட்டு ஒலித்தலும், ஆஈரியல - ஆகிய இருவகையில் உயிர்மெய் எழுத்துக்கள் ஒலிக்கும் தன்மையவாம்

உயிர் மெய்யெழுத்துக்கள் பிறக்கும் வகை இந்நூற்பாவில் கூறப்படுகிறது. க் - இது புள்ளியுடைய மெய்; க - புள்ளி பெறாது 'அ' என்னும் உயிரோடு கூடிய உயிர்மெய். உயிரும் மெய்யும் சேர்ந்ததே உயிர்மெய். இவ்வாறு 'க்' என்பதும் 'க' என்பதும் வடிவத்தில் மாற்றம் பெறவில்லை. 'அ' என்னும் உயிர் அதனோடு இயைந்ததே இதற்குக் காரணம். ஆனால் ஏனைய 'ஆ'இ,ஈ முதலிய பதினோர் எழுத்துக்கள் 'க்' என்னும் மெய்யுடன் சேரும்போது க்+ஆ = கா, க்+இ = கி என்றிவ்வாறு சிறிது வடிவ மாறுபாடு பெறும் என்பது கருத்து.

**18. மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே**

**(பொ-ரை)**

மெய் ஒலிமுன்னரும் அதன் மேல் ஏறிய உயிர் ஒலி பின்னரும் தோன்றும் தன்மையது உயிர்மெய் எழுத்து. க்+அ = க. - இங்கு ககர ஒலி முன்பும், "அ"கர ஒலி பின்பும் தோன்றும். ஒலித்து உணர்ந்து கொள்க.

**19. வல்லெழுத்து என்ப க ச ட த ப ற என்னும் ஆறு மெய்யெழுத்துக்களும்.** இவை வன்கணம், வல்லினம் எனவும் பெயர் பெறும்.

**20. மெல்லெழுத்து என்ப ங ஞ ண ந ம ன**

**(பொ-ரை)**

மென்மையான ஓசைபெற்று வருவன ங ஞ ண ந ம ன என்னும் ஆறு மெய்களும். இவை மென்கணம், மெல்லினம் எனவும் படும்.

**21. இடையெழுத்து என்ப யரல வழள**

**(பொ-ரை)**

வல்லோசையும் மெல்லோசையும் இன்றி இடைப்பட்ட ஓசை உடைய மெய்யெழுத்துக்கள் ய ர ல வ ழ ள என்பன. இவை இடையினம், இடைக்கணம் எனவும் பெயர் பெறும்.

*(தொடரும்...)*

# சிலப்பதிகாரத்தில் தோன்றும் முக்கியமான கதாபாத்திரங்கள்

- பேரறிஞர் ந. சுப்பிரமணியன்

பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் முக்கியமான கதாபாத்திரங்கள் மிகச் சிலரே என்பது சற்று வியப்பைத் தருவதொன்றாம். அக்காப்பியத்தில் வரும் சில்லறைப் பாத்திரங்கள் அவற்றை அறிஞர் ஆய்வு செய்யும் அளவிற்கு முக்கியமானவர்களல்லர். சிலப்பதிகாரக் கதையை ஆய்வோர் வஞ்சிக்காண்டத்தைச் சற்று ஒதுக்கி வைத்து விட்டுப் புகார், மதுரைக் காண்டங்களிற் காணும் செய்திகளை மட்டும் கொண்டு ஆய்தல் வேண்டும்; ஏனெனில் மதுரைக் காண்ட இறுதியோடு சிலம்பின் வரலாறு முடிந்து விடுகிறது.

சிலப்பதிகாரத்தில் கீழ்க்காணும் பாத்திரங்களைப் பற்றிய பண்பு ஆய்வு தேவைப்படும். அவர்கள் கீழே குறிப்பிடப்படும் நிரலே முக்கியத்துவம் பெற்றவர்கள். 1. மாதவி; 2. கோவலன்; 3. பாண்டிய மன்னன்; 4. கண்ணகி; 5. கோப்பெருந்தேவி; 6. பொற்கொல்லன்; 7. மாதரி. மேற்கூறிய வரிசையிலேயே ஒவ்வொரு கதா பாத்திரத்தின் தன்மையையும் சற்று ஆராய்வோம்.

**1. மாதவி :** கதை முழுவதிலுமே அறிவறிந்த வாசகரின் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கும் தன்மையள் மாதவி. அவளது தன்மை ஒன்றற்கொன்று மாறுபட்ட பல பண்புகளை உடையது. அவள் கணவனால் துறக்கப்பட்ட ஒரு கற்புடையாளது கணவன் ஒருவனுடைய ‘மணப்புற மனைவி’ (மணம் செய்து கொள்ளாத ஆனால் மனைவி போன்றே வாழ்பவள்) அவள் கண்ணகியின் புலம்பல் துயரத்திற்குக் கோவலனே முதற்காரணனாயினும் தானும் மறைமுகமாகவேனும் ஒரு காரணியானவள்; அவள் கணிகையர் குலத்தில் பிறந்தவள். விருப்பமுடைய யாவர்க்கும் விரும்பிய யாவும் விலைபேசி விற்கும் மரபில் வந்தவள். ஆயினும் அவள் மாசற்ற கற்புடையளாகத் தன் வாழ்க்கையை நடத்தியவள். வாழ்க்கையைச் சுவைப்பட வாழ விரும்பிய கலா விநோதனான ஒருவனோடு பல்கலை விற்பன்னையாக வாழத் தெரிந்தவள். அவள் தன் காதலன் மகளைப் பெற்ற தாய்; கண்ணகி கோவலன் பால் பெற்றிருந்த மண உரிமைகள் யாவற்றையும் உலகியல் நிலையில் பறித்துக் கொண்டவள்; அவளது மகிழ்ச்சிக் கண்ணீருக்குக்

கண்ணகியின் துயரக் கண்ணீர் ஒன்றே நிகராகும். ஆயினும் அவள் கண்ணகியின் துயரத்திற்கு நேரடியாகப் பொறுப்பாளியல்லள். அவளது கலையின் சிறப்பும் மெய்யின் அழகும் கோவலனது திருமணக் கடமையுணர்ச்சிகளை - அவனுக்கு அத்தகைய உணர்ச்சிகள் இருந்திருக்குமாயின் - வென்றுவிட்டன. தன் குலத்தோடு பட்ட இழிந்த மரபுகள் யாவற்றையும் துறந்துவிட்டவளாயினும் அவள் தன் காதலன் பால் சில அசாதாரணமான உரிமைகளைக் கொண்டாடும் இயல்பினள்; அத்தகைய உரிமைகளை மரபு வழி வந்த குடும்பப் பெண்ணான கண்ணகி எண்ணியும் பார்க்க மாட்டாள். ஆனால் அவள் கொண்டாடிய உரிமை இறுதியில் அவள் காதலனது நட்பிற்கே இறுதி தேடிவிட்டது. யாரிடமும் நெடிது காலம் ஒருமனப்பட்டு வாழும் இயல்பில்லாத கோவலன் ஒரு சிறு புலவி நீட்டத்தால் அவளையும் வெறுத்து நீங்கினான். அஃதாயினும் நீக்கப்பட்டவள் தனது சிறு தவற்றினையுணர்ந்து (கானல் வரியில் காதலனின் மனப்பான்மையையுணர்ந்து செயற்படாததுதான் அவள் செய்த தவறு), மிகுந்த பெருந்தன்மையோடு செயற்பட்டாள். 'ஐயர்யாத்தகரணம்' பிறழாது திருமணம் புரிந்து கொண்ட மனையாளும் போற்றும்படி தமது பிற்கால வாழ்க்கையை அமைத்துக் கொண்டு துறவு பூண்டாள். ஆடவரை நம்பலாகாத் தன்மையை அனுபவத்தில் கண்டவள். தன் மகளையும் - உண்மையான காதலின் தோன்றலான அம்மகளையும் - துறவரத்திற்கே பயிற்றினாள்.

மரபு வழியே சிந்தித்துப் பழகியவர்கள் மண வாழ்க்கை கற்பிற் சிறந்த கண்ணகியின் பெருமையைச் சிறப்பிக்க வேண்டி மாதவியின் தனிச்சிறப்பினை முற்றிலும் உணரத் தவறி விடுவது பெரும்பான்மை ஆய்வாளரிடையே காணப்படும்.

உண்மையில் கோவலனை எதிர்மறை வாயிலாக இழந்தவள் கண்ணகி. தனக்குரிய பொருள் தன்னாற்றுய்க்கப்படாமல் தன்னிடத்திலிருந்து நீங்கி விடுவதால் வரும் எதிர்மறை இழப்புத்தான் கண்ணகியின் அனுபவம். ஆனால் தான் காதலித்த, அக்காதலின் சான்றாக தன் பால் ஒரு மகவைப் பெற்ற, அக்கோவலனை உடன்பாட்டு முகத்தால் இழந்தவள் மாதவியே. கண்ணகியின் இன்ப வாழ்க்கை ஈடேறாமல் போனதற்குப் பலர் காரணர் - பாண்டிய மன்னனும், பொற்கொல்லனும், அவள் கணவனுமே முக்கிய காரணங்கள்; மாதவி அதற்கு ஓர் இரண்டாம் நிலைக் காரணி எனலே பொருந்தும்.

**2. கோவலன் :** இவன் சிலப்பதிகாரத்தின் பெயரளவிற்கு அமைந்த கதாநாயகன். உண்மையில் அக்கதைக்கு இரு நாயகியர்தாம்

உளர்; நாயகன் என்பான் ஒருவன் இருப்பதாகக் கூறமுடியாது. மாதவி கண்ணகி ஆகிய இருவருடைய இன்னல்களுக்கும் காரணனாயிருந்தது தவிர வேறொன்றும் உடன்பாட்டு முறையில் சாதித்தவன் அல்லன். அவன் இந்துக் குடும்பங்களிற் காணப்படும் பெரும்பான்மைக் கொழுநர்களின் இயல்புகளுடையவன். மணமான ஆடவர்கள் கணிகையர்பால் உறவு கொள்ளுதலை நடைமுறையளவில் அக்காலத்தில் ஒருவரும் மறுக்கவில்லை. இன்றும் .கொள்கையளவில் பரைவின் மகளிரைப் பழித்தல் உண்டேயன்றி நடைமுறையில் மிரு பும் மாறி விடவில்லை. கற்பிற்கணிகலனான கண்ணகியைத் து, முதலாகிய, எஞ்ஞான்றும் யாராலும் மன்னிக்க முடியாத குற்றச் செய்கையினன். அவன் பிற்காலத்தே கொலையுண்டிறந்த போகூழ் இச்செய்கை ிந் தார்மிக விளைவு என்று கருத வேண்டாம்; அவற்றிடையே யாதொரு தொடர்பும் இருத்தல் கூடாமையின் ஊழிற் பெருவலி யாவுளவென்னும் கருத்தைப் பொதுவாக ஏற்றுக்கொள்வதில் குற்றமின்றாயினும் கோவலன் வாழ்க்கை சீரழிந்ததற்கு அவன் மாதவிபாற் கொண்டிருந்த உறவே எனலும் மிகைக் கூற்றின்பாற்படும் என்க.

கோவலன் ஒழுகலாற்றிற் குற்றப்பட்டவன் என்பதில் தடையில்லை. ஆயினும் அவனையும் அவன் நிலையிலிருந்து பார்த்துப் புரிந்து கொள்ள முயல வேண்டும். அவனது நல்லியல்புகளைக் காப்பிய ஆசிரியர் நன்கு விரித்துக் கூறியுள்ளார். குற்றம் செய்தவனாயினும் அதனைப் பிறகு உணர்ந்து கழிவிரக்கம் கொண்டவனாதலின் அவன் வாசகரது மன்னிப்பிற்குச் சிறிது உரியவனே எனல் வேண்டும். அவன் கலை மற்றும் காதல் என்பவற்றின் திருவுருவமான மாதவி ஒருபாலாக, கற்பின் மாசற்ற திருவுருவான கண்ணகி . ஒருபாலாக இரண்டு வேறுபட்ட நிறைகட்கிடையே அகப்பட்டுக் கொண்டவன். முந்தியது உடன்பாட்டுச் சிறப்புடையது; பிந்தியது எதிர்மறைப் பண்பு நிலை.

வாழ்க்கையை நெறிபட நடத்துதல் மட்டும் போதாது; அதனை அனுபவிக்கவும் வேண்டும் என்று விரும்பிய கோலவனுக்கு வேண்டிய வேண்டியாங் களிக்கும் திறமை மாதவிபாலிருந்தது. கணவன் சொல், செயல் எதற்கும் மறுப்புக் கூறாப் பெருந்தகை கண்ணகி என்பது ஐயமின்றாயினும், மாதவியின் கலைச்சிறப்பாற் பிறந்த மகிழ்வு மணந்த மனைவியிடம் அவன் எதிர்பார்க்க முடியாத நிலைமை கோவலனை எதிர்நோக்கிற்று. அவன் மனைவியைத் துறந்து மாதவியையை அடைய மேற்கொண்ட முடிவு தவறானது என்பது ஒருதலை. ஆயினும் வாழ்க்கையில் ஒருவகை மகிழ்ச்சியை விரும்பிய கணவனுக்கு

வேண்டியதெல்லாம் கற்பின் பெருமையொன்றே என்று கண்ணகி கருதியிருந்தால் அதனைக் கோவலன் ஏற்றுக்கொள்ளவில்லை என்றே காண்கிறது.

கோவலனிடம் சீரிய பண்புகள் சில இருந்தன. ஆயினும் அவற்றைப் பயனற்றுப் போகும்படி செய்யும் திறமையுடைய குறைபாடு ஒன்று தலைதூக்கி நின்றது. இராவணனிடம் சிவ பக்தி போன்ற பல நற்பண்புகள் பல இருந்தும் பிறன்மனை நோக்கிய தீமை அவன் இறுதிக்கே வழி தேடிற்று. அவ்வாறே கோவலனிடம் நற்பண்புகள் சில இருந்தன. அவன் கொடையிற் சிரத்த. பூதத்தால் ஒறுக்கப்பட்டானது சுற்றத்தைப் பொருளீந்து காத்தன் முதலிய அவை. ஆயினும் மணந்த மனைவியை மறந்த தவறு அவற்றையெல்லாம் விஞ்சி நின்றது.

**3. பாண்டிய மன்னன் - ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் :** இவன் சிலப்பதிகார மதுரைக் காண்டத்தில் இரண்டாம் நிலைக் குற்றவாளி. ஆராயாது ஆணையிடும் அரசன் கொடுங்கோலனே. ஆயினும் அவன் பொற்கொல்லனைப் போன்று முதல் நிலைக் குற்றவாளியல்லன். கவனக்குறைவு. எண்ணாமல் கருமத்தைத் துணிந்தமை ஆகிய குற்றங்கள் ஓரரசனிடம் இருக்குமாயின் எத்துணைப் பெரிய இன்னல்களுக்கு அது வித்திடும் என்பதை அம்மன்னன் செயல் விளக்குகின்றது. ஆயினும் அவன் உண்மையை உணர்ந்தபிறகு கொண்ட கழிவிரக்கம் அவனது ஆதார நற்குணத்தை காட்டுகின்றதேயன்றி அது அவன் கோவலனது இறப்பிற்குக் காரணம் என்னும் உண்மையை மாற்றி விடாது. விடாதேனும் அவன் கழிவிரக்கத்தால் உயிர் துறந்தமை நம்மை அவன்பால் இரக்கங்கொள்ளத் தூண்டுகின்றது. அவன் செய்த குற்றத்தால் அவனும் அவன் மனையாளும் கோவலனும் கண்ணகியும் மாதரியும் மதுரை நகர மக்களில் எண்ணிறந்தோறும் இறந்து விட நேர்ந்தது என்பதை மறுக்கமுடியாது. சிலப்பதிகாரத்தில் கழிவிரக்கம் கொண்டவர்கள் இருவர். 1. கோவலன் 2. பாண்டிய மன்னன்.

இரண்டு கழிவிரக்கங்களும் பயனின்றிக் கழிந்தன. பாண்டியன் செய்கையைக் கேட்டுச் செங்குட்டுவன் 'மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பமல்லது தொழுதகவில்' என்று கூறியது பொருத்தமுடைத்தே.

**4. கண்ணகி :** சிலப்பதிகாரத்து இரு பாட்டுடைத் தலைவியரில் மூத்தவள். அவளது சிலம்பு காரணமாக அக்காப்பியம் பெயர் பெற்றது. கற்பு என்னும் சொல்லின் விளக்கமாக விளங்கிய பெருமாட்டி.

அருந்ததியொத்த கற்பினள். அவள் பெருமை அவள் இயல்பாலே மட்டுமன்றி அவள் பட்ட துன்பத்தாலும் அதனை அவள் பொறுத்துக் கொண்ட தன்மையாலும் பெறப்படும். புகார்க் காண்டத்தில் அவள் உள்ளே உறைந்து கிடந்த பனிக்கட்டி போன்ற பொறை மதுரைக் காண்டத்தில் ஒரு எரிமலை அதன் தீக்குழம்பைக் கக்கியது போல் வெளியாயிற்று. அவள் வாழ்க்கை முழுவதும் அவள் கணவன் ஒருவனைச் சுற்றி அமைந்தது. அவள் வாழும் நாளெல்லாம் தன் கணவன் தன்னுடன் வாழினும் வாழாவிடினும் - அவன் மகிழ்ச்சிக்கு உதவுவதே தன் கருமமாகக் கொண்டு கழிந்தனள்; அவன் இறந்தபின் அவளுக்கு அந்த எல்லைக்கோடு மறைந்து போயிற்று. ஆதலால் அவள் தன் அமைதிப் பண்புகளை முற்றிலும் மாற்றிக்கொண்டு தீங்கறியாத தன் கணவனுக்குத் தீங்கிழைத்தாரை வஞ்சம் தீர்த்துக்கொள்வதொன்றே கடன் என்று அக்கடனையும் ஒருவாறு முடித்துக் கொண்டு இனி இவ்வுலகில் வேண்டியது ஒன்றுமில்லென்று தெளிந்து தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்ட சிறப்புடையவள். கோவலன் வாழ்ந்திருந்த வரையில் அவள் தன் வாழ்க்கையில் ஒரு குறைவும் இருந்ததாகக் கருதவில்லை. அவள் இறந்தபின் அவள் வாழ்க்கைக்கு யாதொரு பொருளும் இருந்ததாகக் கருதவில்லை. அவள் தன் கணவனுக்காகவே வாழ்ந்தவள்.

ஆயினும் அவள் ஏன் அப்படித் துன்பமுற்றாள்? துன்புறுதல் என்பது அதன் அளவிலேயே ஒரு சீரிய செயற்பாடு அன்று. சூழ்நிலையின் தாக்குதலினாலும் உள்ளத்தின் தன்மையாலும் துன்பம் ஏற்படுகின்றது. சில சமயம் இத்தாக்குதல் தவிர்க்கமுடியாததாகிறது; தன்மை பெரும்பாலும் மாற்ற முடியாததாகவே அமையும். கோவலன் தன்னைப் புறக்கணித்ததால் கண்ணகி துன்புற்றாள் என்று நாம் நினைத்துக் கூறுவதற்குக் காரணம் ‘அந்த நிலையில் நாம் இருந்தால் நாம் துன்புறுவோம்; ஆதலால் அவளும் துன்புற்றிருப்பாள்’ என்று நாம் கருதுவதுதான். உண்மையில் அவள் தன் கணவன் மாதவியோடு மகிழ்ந்திருந்ததை அறிந்து ‘அவன் எக்காரணத்தாலேயாயினும் மகிழ்வுடன் இருக்கிறான், அதுவே போதும்’ என்ற நினைப்பாலும் அமைதி சான்ற மகிழ்ச்சியுற்றிருப்பாள் என்பதே உண்மை. ஏனெனில் ‘சிறு முதுக்குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்; வழுவெனும் பாரேன்; மாநகர மருங்கீண்டு எழுகென எழுந்தாய் - என் செய்தனை’ என்று அவள் அமைந்த செயற்பாட்டினைக் காலங்கடந்தேனும் உணர்ந்த கோவலன் கூறலும், அதற்கு அவள் உள்ளத்தின் பாங்கினைத் தெளிவுறக் கூறுகின்றாள்:

‘‘அற்புளஞ்சிறந்தாங்கு அருண்மொழி அளைஇ, எற்பாராட்ட, யானகத்தொளித்த நோயும் துன்பமும், நொடிவது போலும் என்வாய்தல்

முறுவற்கு அவர் உள்ளகம் வருந்தப் போற்றா வொழுக்கம் புரிந்தீர்யாவதும் மாற்றாவுள்ள வாழ்க்கையேனாதலின்'' என்று தன்னைப் பற்றி அவளே கூறுமாற்றால் அவள் அவனிடம் தவறு காணாதவள் என்பது வெளியாகின்றது: அதாவது அவள் கண்ட தவறினைப் பொருட்படுத்தவில்லை என்பது இதனால் தவறுகாணாளாய்த் துன்பமும் இலளாயினள் என்பது போதரும். இயற்கை செலுத்திய நெறியினின்றும் விலகித் தனது பண்பாட்டுச் சிறப்பால் தன்னைக் கற்புநெறிப்படுத்திக் கொண்ட பெருமாட்டியின் மனப்பாங்கு தனித்தன்மையுடையது. பன்னீராண்டகவையில் அவள் பெற்றாள் ஒரு செல்வச் சிறப்புடைய காதற்கணவனை. மிகவிரைவிலேயே அக்காதலும் செல்வமும் மாதவிபாற் சென்றடைந்தன. கண்ணகியோவெனில் தன் கணவன் உயிருடனும் மகிழ்வுடனும் வாழ்ந்திருத்தல் ஒன்றே போதும் எனக் கருதியிருந்தனள்.

ஆயினும் அவள் எய்திய நிலைமைக்கு அவளேயும் ஓரளவு பொறுப்பாளி என்பதையும் காண வேண்டும். கோவலன் 'வாழ்க்கை அறநூற்கட்டளைப்படி வாழ்வது மட்டும் போதாது; அது அனுபவத்திற்கும் உரியது' என்று கருதினான். அக்கருத்தின்படிச் செயற்படத் தொடங்கி சுக அனுபவத்தைப் பெறுவதற்காக அவ்வறநூற்கட்டளை ஒன்றினை மாறிச் செயற்பட்டான்.

கண்ணகி அறநூற்கட்டளைகளை முற்றிலும் பின்பற்றி வாழ்ந்தமையின் சுக அனுபவத்தை இழக்காமல் இருப்பதற்குத் தான் மேற்கொள்ள வேண்டிய சில செயற்பாடுகளைப் புறக்கணித்துவிட்டாள். இவளும் மாதவியைப் போல இசை மற்றும் ஆடல் பாடல்களால் தன் கணவனைக் கவர்ந்திருப்பாளாயின் கோவலன் மாதவியைப் பற்றிச் சிந்தித்திருக்கமாட்டான். இது மணமான மகளிர் யாவரும் எண்ணிப்பார்க்க வேண்டியது. தான் கற்புடையவளாயிருந்த ஒரு காரணத்தாலேயே கலாவினோதனான கணவனுடைய மனம் முற்றிலும் நிறைவுபெற்றுவிடும் என்று கண்ணகி கருதியிருக்க வேண்டும். இவ்வாழும் பிரசினையைக் கோவலன் கோணத்திலிருந்தும் பார்க்கத் தவறுவது பெரும்பான்மை மரபு.

**5. கோப்பெருந்தேவி :** பாண்டியன் மனைவியின் பண்பு மிகவும் எளியதொன்றாகும். அதில் உளவியற் சிக்கல்கள் ஒன்றுமில்லை. அவள் அறக்கற்பினள். தான் செய்த பெரும்பிழையினையுணர்ந்த பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். 'யானோ அரசன், யானே கள்வன்; மன்பதை காக்கும் தென்புலங்காவல் என்முதற் பிழைத்தது, கெடுக என் ஆயுள்' என்று மயங்கி வீழ்ந்ததைக் கண்ணுற்ற

தென்னவன் கோப்பெருந்தேவி 'குலைந்தனள் நடுங்கி; கணவனை இழந்தோர்க்கு காட்டுவதில்லென்றிணையடி தொழுது வீழ்ந்தனளே'. தன் கணவன் இறந்துவிட்டனன் என்பதை ஓரளவு உணர்ந்ததுமே அவள் ஆருயிரும் பிரிந்தது - அவள் அறக்கற்பினளாதலைக் காட்டும். தன் கணவன் பிழையைப் பற்றி, கண்ணகியைப் போலவே, அவளும் கருதலாயினள். அவனிடம் குறை காண்பது அவட்குரியதன்று. அவன் அவளுடைய ஆவி. அவன் இறந்ததும் அவளும் உடனே மாய்ந்ததில் வியப்பில்லை. கணவனை 'இறந்தார்க்குக் காட்டுவதில்' என்பதையுணர்ந்த அவ்வறக்கற்பினள் வஞ்சியில் செங்குட்டுவனது தேவியின் புகழுரைக்கு முற்றிலும் உரியளாயினள். மாபெருந் தேவி 'காதலன் துன்பங்காணாது கழிந்த மாதரோ பெருந்திருவுறுக வானகத்து' என்றது உண்மைக் கூற்று. இதனைக் கந்தபுராணத்துள் கச்சியப்பர்

*"காவன் மனைவனிறந்தனனெனுமுரை கன்னத்துள்*
*மேவுமெல்லையில சனியேறுண்ட வெம்பணியேபோற்*
*றேவியாகிய பதுமகோமளை யெனுந் திருமங்கை*
*யாவி நீங்கினள் தலையளியாகியத துவன்றோ?"*

என்றதோடு ஒப்புக்காண வேண்டும். ஆங்கு இறந்தனன் என்றும் உரை மேவுதலும் மங்கை ஆவி நீங்குதலும் இடையீடு படாச் செயல்கள் என்பது காண்க.

கணவனையிழந்தும் கண்ணகி சிறிது காலம் உயிர் வாழ்ந்திருந்து தன் கணவன் கள்வனல்லன் என்பதை உலகினர்க்குக் காட்ட வேண்டிய கடமை அவளுக்கு இருந்ததால்தானேயன்றிப் பிறிதன்று. ஆதலால் கண்ணகியின் கற்பு மறக்கற்பு எனப்படும். கோப்பெருந்தேவியின் கற்பு அறக்கற்பு (இதனைக் கச்சியப்பர் தலையளி என்பர்) எனப்படும். இவ்வேறுபாட்டிற்குக் காரணம் கண்ணகி தனது மீதூரிய துயரத்தால் தனது பகைவர்களைத் தீக்கடவுள் வாயிலாக ஒறுத்தனள்; ஆயினும் கோப்பெருந்தேவி தன் கணவன் இறந்ததற்குக் காரணம் யாரென்று சற்றும் சிந்தித்தாளில்லை என்பதேயாம்.

**6. பொற்கொல்லன் :** சிலப்பதிகாரக் கதையில் இரண்டு முக்கியமான திருப்புநிலைகள் உள: 1. மாதவியின் வரிப்பாட்டின் உட்பொருளை உள்ளபடி உணராது பொய்க்குற்றங்கண்டு கோவலன் அவளை நீங்கிய நிலை. இதனை 'கானல் வரி'யிற் காண்க. 2. 'பொய்த்தொழிற் கொல்லன்... விறன் மிகு வேந்த'ரிடம் கோவலனைக் கள்வன் என்று கூறிக் கொல்வித்த நிலை. இதனைக் கொலைக்களக் காதையிற் காண்க. இவ்விரண்டாம் திருப்பத்தை ஆக்கியவன்

கலப்படமற்ற கயவனான பொற்கொல்லன். குற்றஞ்செய்யாதான் மீது குற்றத்தைப் பொய்யாக ஏற்றிக் கொல்லுவித்த இயக்கயவனுக்கு அக்காப்பியத்தில் எவ்விதத் தண்டனையும் கூறப்படவில்லை என்பது கருதத்தக்கது. கயமை அவனது இயல்பு. தீமைநிறைந்த உலகில் அவனைப் போன்றோர் பலருளர்; அதில் அவனும் ஒருவன் - அத்துணையே. ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ நாடகத்தின் தலைசிறந்த கயவனான அயகோ (Iago) தண்டனையின்றித் தப்பிவிடுவதும் காணவேண்டும். 'உன்போன்றோர்க்கு உயிர் வாழ்வதுதான் தண்டனை' என்று ஒதெல்லோ கூறியது இப்பொற்கொல்லனுக்கும் பொருந்தும்.

**7. மாதரி :** இவள் ஓர் இடைமகள்; இவள் தன்னிடம் அடைக்கலமாக விடப்பெற்ற கோவலன் கண்ணகியர் துயருறுவதைக் கண்டபொழுது 'ஐயந் தீர்காட்சியடைக்கலந்காத்தோம்பவல்லா தேன் பெற்றேன் மயலென்று உயிர் நீத்த அவ்வை'. விருந்தோம்பல் என்பது இல்வாழ்வோர் கடன் என்று தமிழர் அறம் கூறிற்று. அதனைக் கடைப்பிடிக்க இயலாமற் போனதை நினைத்து உயிர் நீத்தாள் அவள். அவர்கள் அடைந்த துன்பத்திற்கு அவள் எத்துணையும் பொறுப்பாளியல்லள் என்பதை அவள் உணர்ந்தேயிருக்க வேண்டும். ஆயினும் அடைக்கலப் பொருளைக் காக்க இயலாமல் போன துயரம் தாங்காமல் அவள் உயிர் நீத்தனள். இத்தமிழர் பண்பாட்டு வரலாற்றினை ஆய்வார் நெடிதுநுண்ணிதின் நினைக்க வேண்டியது ஓர் அறம்.

# திருமூலர் கூறும் சமுதாயத் தீர்வுகள்

- ஆய்வாளர் சா. நடராஜவேலு

**முன்னுரை :**

மக்கள் சமுதாயத்தில் நடைபெறுகின்ற செயல்முறைகளுள் சில இனியனவாகவும் சில இன்னாதனவாகவும் இருப்பதற்குக் காரணம் அவரவர் பிறந்த குடிப்பெருமையில் மூழ்கி, சாத்திரச் சம்பிரதாயச் சடங்குகளில் மிதந்து, ஆணவ நடத்தையையே ஆனந்த நடனமாகக் கருதி, தன்மனையை விட்டுப் பிறன்மனை புகுந்து பேரிழப்பை ஏற்று, பேரின்ப வாழ்வை அழித்துக்கொள்ளும் அறிவிலிகளுக்கு அடிப்படையிலேயே அன்பும், அறமும், இரக்கமும் இல்லாமையால், அவ்ர்கள் இந்தவுலகின்கண் செய்கின்ற இன்னல்களுக்குத் தீர்வுகள் சிலவற்றைப் பலர் கூறியிருப்பினும் திருமூலர் கூறும் தீர்வுகள் குறித்து இந்தக் கட்டுரையில் பேசுகிறோம்.

**அன்புடையவராக இருத்தல் :**

அறிவியல் உலகமாகிய இன்றைய உலகில் அறிவியலின் மகத்தான வளர்ச்சியினை ஆக்கச் செயல்களுக்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, அழிவுச் செயல்களுக்குப் பயன்படுத்திக் கொலை, கொள்ளை, களவு, கடத்தல், கற்பழிப்பு, வஞ்சகம், பொறாமை, சூழ்ச்சி, பிரிவினை, இரக்கமின்மை போன்ற பல தீய செயல்களில் சிக்கித் தானழிவதுடன் நில்லாமல் இந்தச் சமுதாயத்தையே சீரழிக்கும் கயவர்களிடம் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்குத் திருமூலர் கூறும் தீர்வு யாதெனில் ''மக்கள் ஒருவருடன் ஒருவர் அன்பு கொண்டு வாழ்தல் வேண்டும்'' என்பதே அந்தத் தீர்வாகும்.

மக்கள் சமுதாயத்தில் மட்டும் இல்லாமல் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களிடத்தும் அன்பு காட்டுவதால் பாவங்களும் பழிகளும் ஏற்படுவது இல்லை, சமயச் சண்டைகளும் வலுப்பெறுவது இல்லை, பிரிவினை வாதங்களும் எடுபடுவது இல்லை. மக்கள் சமுதாயம் முழுவதும் ஒரே சமுதாயமாகவும், ஒரே சமயத்தினராகவும் காழ்ப்பு உணர்ச்சியின்றி வாழ்வதற்கும், நாட்டில் அமைதி நிலைபெற்றிருப்பதற்கும் அடிப்படையாக அமைவது அன்பேயாகும். உலக உயிர்களாகவும், சிவமாகவும் இருப்பவன் சிவன். உலக உயிர்களிடம் காட்டுகின்ற அன்பு சிவனிடம் காட்டுகின்ற அன்பாகும்.

'அன்பே சிவம் - சிவமே அன்பு' என்பதை அறிந்து அன்புடையவராய் இருத்தல் வேண்டும் என்பதைத் திருமூலர்,

*"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாற் அமர்ந்திருப் பாரோ"* **- (திருமந்திரம் - 257)**

என்ற பாடலின் மூலம் வலியுறுத்தி உள்ளார்.

**ஆசையை நீக்குதல் :**

மனித மனத்தில் சுழற்காற்றைப் போல ஆசை அதிகரித்துச் சுழன்று கொண்டே இருந்தால் மனித இனமே இல்லாமல் போய்விடும். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகியவற்றின் காரணமாக அடிக்கடி ஆட்சிமாற்றங்களும், அரசியல் மாற்றங்களும், குழப்பங்களும், கொந்தளிப்புகளும், பதவிச் சண்டைகளும் நாட்டில் நடந்தவண்ணம் இருக்கின்றன. இதனால் மனித நேயம் நாளுக்கு நாள் நசுங்கிக் கொண்டே வருகிறது. மனிதநேயம் மட்டும் இல்லை என்றால் காட்டு மிராண்டிகளைப் போல, விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த பண்டைய நாகரிகத்திற்கே நாம் மீண்டும் செல்ல வேண்டியிருக்கும்.

சமுதாய அமைதிக்குக் கேடுவிளைவிக்கக் கூடிய ஆசையைப் போக்க வேண்டும் என்பதைத் திருமூலர் 'ஆசை அறுமின்கள்' என்று குறிப்பிடுகின்றார். ஆண்டவனாக இருந்தாலும் அவனிடம் ஆசைவைத்தல் கூடாது. ஏனெனில், ஒருவரிடத்தில் எந்த அளவிற்கு ஆசை அதிகரித்துக் கொண்டிருக்கிறதோ அந்த அளவிற்குத் துன்பமும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஆசை குறையக் குறையதான் துன்பமும் குறைந்து கொண்ட வரும் என்பதைத் திருமூலர்,

*"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்*
*ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்*
*ஆசை மிகமிக ஆய்வருந் துன்பங்கள்*
*ஆசை விடவிட ஆனந்த மாமே"*

என்ற பாடலின் மூலம் ஆசையை நீக்குதலின் அவசியத்தை வலியுறுத்துகின்றார்.

**ஈகை செய்தல்:**

ஒருவர் செய்யக்கூடிய அறச்செயல்களுள் முதன்மையாக இருப்பது ஈகையாகும். ஈகை செய்பவர்களின் எண்ணிக்கையும் எண்ணமும் குறைந்து கொண்டே வருவதால் வறுமையும் வறுமையாளர்களும் "

அதிகரித்துக் கொண்டே இருக்கின்றனர். வறுமையைப் போக்க இயலாதவர்கள், வேறுவழி தெரியாதவர்களாய் வழிப்பறியையும், கொள்ளையையும் கொலையையும் செய்கின்றனர். மனிதகுலத் தோன்றல்களுள் சிலர் தங்களின் தசையைத் தானே விற்று வறுமையைப் போக்குவதையும் காணமுடிகிறது. இந்நிலைமையை அகற்ற சிறந்தவழி ஈகைசெய்தலாகும். தன்னிடம் உள்ளவற்றைப் பிறர்க்களித்தலே ஈகை எனலாம்.

ஈகை செய்தல் எல்லோருக்கும் உரிய செயற்பாடாகும். இதற்கென மிகுந்த சிரமப்பட வேண்டிய அவசியம் இல்லை. ''உண்பதற்கு முன் ஒரு கைப்பிடி உணவை உவகையுடன் பிறருக்குக் கொடுத்தல் வேண்டும்'' (திருமந்திரம் - 109) தன்னிடம் உள்ள செல்வத்தைப் பகிர்ந்து பிறருக்குக் கொடுக்க வேண்டுமானால், ''அவற்றின்மீது கொண்டுள்ள கடும் பற்றினைக் களைந்து கொள்ள வேண்டும்'' (திருமந்திரம் - 216) - ஏனெனில் செல்வத்தின்மீது பற்றிருந்தால் அதனைப் பிறருக்குக் கொடுக்க மனம் இசையாது என்பதால் அப்பற்றினை நீக்க வேண்டும் என்று கூறுகிறார் திருமூலர்.

இன்றைய காலகட்டத்திலும் ''உண்டகம் செய்த வீட்டில் இரண்டகம் செய்தல் கூடாது'' என்ற வழக்காற்று மெய்ம்மை கடைபிடிக்கப் படுகிறது. சமுதாயத்தில் தீமை செய்பவர்கள்கூட உணவு வழங்கிய வீட்டிற்குத் தீமை செய்தலை விரும்பவில்லை என்பதால் உணவு வழங்குதலின் சிறப்பினை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

*''இன்மையின் இன்னாதது யாதெனில் இன்மையின்*
*இன்மையே இன்னா தது''*

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப மிக்க வறுமையில் வாடுபவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் கோயில்களுக்குச் சென்று காணிக்கை செலுத்துவதும், பாலபிஷேகம், பன்னீரபிஷேகம், நெய்யபிஷேகம், நெய்வேத்தியம் முதலியன செய்வதால் பலனேதும் இல்லை. நடமாடும் திருக்கோயில்களாகிய வறியோர்களுக்கு உதவுவது சிறந்த பயனைத் தரும். இவர்களுக்குச் செய்யும் சிறப்பு முழுவதும் படமாடும் கோயிலிலிருக்கின்ற பரமனுக்குச் செய்யும் சிறப்பாகும். இந்தக் கூற்றைத்தான் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று பலர் கூறிவருகின்றனர். படமாடும் கோயிலில் வாழும் பரமனுக்குத் தொண்டு செய்வது ஒருநாளும் நடமாடும் கோயில்களுக்கு உதவுவதில்லை என்பதைப்

*படமாடக் கோயில் பகவற் கொன்றியில்*
*நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா*
*நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றியில்*
*படமாடக் கோயில் பகவற் காதாமே"* - *(திருமந்திரம் - 1821)*

என்ற பாடலின் மூலம் அறியமுடிகிறது. இறைவனை இவ்வுலகில் நேரடியாகக் காணுதல் என்பது இயலாது. ஆனால் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற வழக்காற்றிற்கு ஏற்ப, ஏழைகள் சிரிக்க வேண்டுமாயின் ''மக்கள் தொண்டுகளில் முதன்மையானதாகிய ஈகையை அனைவரும் பின்பற்ற வேண்டும்'' என்று கூறுகிறார் திருமூலர்.

**குலவேறுபாட்டை நீக்குதல் :**

தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த முதன்மைச் சித்தர்களுள் ஒருவராகிய திருமூலர் வாழ்ந்த காலத்தே நிறைந்திருந்த சாதியும் சமயமும் நிலைபெற்று, சண்டைகள் வலுப்பெற்று மனிதகுலம் அழிவதைக் காணப் பொறாமல்; மக்கள் சமுதாயம் பிணக்கின்றி இணக்கமாக வாழ்வதற்கு வழி செய்யும் வகையில் மனித குலம் என்ற ஒன்று மட்டுமே உள்ளது என்றும், அதற்குத் தலைவனாக இறைவன் ஒருவனே இருக்கின்றான் என்றும், அவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து உள்ளான் என்றும், அவனை அறியாதவர் இறைவனுடன் கலவாதவர் (திருமந் - 297) என்பதை மனித சமுதாயம் அறிந்திருந்தால் இந்து - முஸ்லீம் மோதல் ஏற்பட்டிருக்காது. இவற்றிற்கு எல்லாம் அடிப்படையாக உள்ள பாபர் மசூதியும் இடிபட்டிருக்காது. கிருத்துவக் குருமார் ஒரிசாவில் உயிருடன் எரிக்கப்பட்டிருக்கவும் மாட்டார். இத்தகைய வன்முறைச் செயல்கள் ஏதும் நடைபெறாமல் இருக்கவேண்டுமாயின்,

*''ஒன்றே குலம் ஒருவனே தேவனும்*
*நன்றே நினைமின் நமனில்லை நாணுமே"* - *(திருமந் - 2066)*

என்ற திருமூலர் கூற்றைக் கடைபிடித்தல் வேண்டும். மனித சமுதாயத்தில் சமயம் சார்ந்து மற்றும் குலம்சார்ந்த வேறுபாட்டு உணர்வுகள் தோன்றியதில் தான் மனித குலம் சிதைந்து சின்னாபின்னமாகி வருகிறது. இதனைச் சீர்படுத்த வேண்டுமானால், குலவேறுபாடுகள் மற்றும் சமயவேறுபாடுகள் ஆகிய அனைத்தையும் நீக்க வேண்டிய கட்டாயத்தில் நின்றுகொண்டிருக்கிறோம்.

**சாத்திரங்களை நீக்கச் சொல்லுதல் :**

சமுதாயத்தில் புரையோடி இருக்கின்ற சாத்திர சம்பிரதாயங்களால் ரணமாகிய மக்கள் மனங்களில் துர்நாற்றம் அடிப்பதால் மூட

நம்பிக்கையாகிய இதயங்கள் வாழ்ந்து வருகின்றன. அறிவுச் சுடரை ஏற்றவேண்டிய மக்கள் சமுதாயம் பகவத் கீதையையும், பைபிளையும், குரானையும் கைகளில் ஏந்திக்கொண்டு இருப்பதால் இந்து - கிறிஸ்த்து - இஸ்லாம் என்ற வர்க்க பேதங்கள் வளர்ந்து வருகின்றன. எந்த சாத்திரங்கள் மனிதர்கள் இடத்தில் பிரிவினையை ஏற்படுத்துகின்றதோ அந்த சாத்திரங்களை நீக்குதல் வேண்டும் என்று கூறுவ[illegible]ப போல,

*''சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநர்*
*மாத்திசைப் போதும் அறிந்துகளே நோக்குமின்*
*பார்த்த அப்பார்வை பசுமரத்தாணி போல்*
*ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே''. - (திருமந் - 1637)*

என்று கூறுகிறார்.

**பிறன்மனை நயவாமை :**

ஒருவன் தன் மனைவி இருக்கப் பிறன்மனையைத் தேடிச் சென்றால், பல்வேறு துன்பங்களையும் துயரங்களையும் சுமக்க வேண்டியிருக்கும். அவனுடைய நிலைமையானது விளைவதை அறியாக் காளையர் போலவும், புளியமரக் கொரண்பில் ஏறி அதன் பயனை அடையாமல் கீழே விழுவதைப் போலவும் இருக்கும். அது மட்டுமின்றி பல நோய்கள் வருவதற்குக் காரணமாகவும் அமையும்.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' - என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப ஒவ்வொருவரும் தம்மனைவியைத் தவிர பிறப்பெண்டிரைப் பார்த்தல் கூடாது என்பதைத் திருமூலர் வலியுறுத்துகின்றார்.

**பேரானந்தத்தைத் தெளிவுப் படுத்தல் :**

மக்கள் மனத்திற்கு எவையெல்லாம் மகிழ்ச்சி தரக்கூடியவையாக இருக்கின்றதோ, அவை எல்லாம் ஆனந்தமாகக் கருதப்படுகிறது. மிகுதியான மகிழ்ச்சியைத் தரக்கூடிய அனைத்தையும் பேரானந்தம் என்று அறியாதவர்கள் கூறுகின்றனர். இவர்கள் சிற்றின்பத்தையும், உண்டாட்டு நிகழ்த்துதலையும், உலக மாயையில் மூழ்கியிருத்தலையும், பிறருக்குத் துன்பம் செய்தலையும், பசப்பு வார்த்தைகள் பேசிப் பகட்டாக வாழ்தலையும், பேராசை பிடித்து வஞ்சகமாகப் பலரை அடிமைகளாகவும், எடுபிடிகளாகவும் வைத்துக் கொள்வதைக் கூடப் பேரானந்தமாகக் கருதுகின்றனர். இதனால் சமுதாயத்தில் ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வுகள் குறித்து ஒருபோதும் சிந்தித்தது இல்லை.

சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருத்தல் கூடாது என்பதால், ''வஞ்சனை - பொய் முதலியவற்றைப் பேசுதல் கூடாது என்றும்,

நடுவுநிலைமை தவறுதல் கூடாது என்றும், எந்நிலையினும் மேம்பட்டவராய் வாழுதல் வேண்டும் என்றும் (திருமந் - 238) திருமூலர் கூறுகின்றார். இத்தகைய மேம்பட்ட வாழ்க்கை வாழுகின்றபோது தனிமனிதச் சிந்தனை அற்றுப் போகுங்கால் சிவானந்த நடனம் பேரின்பமாகப் பேரானந்தமாகத் தெரிகிறது என்பதைத் திருமூலர்,

*"ஆனந்தம் ஆனந்தம் என்பர் அறிவிலார்*
*ஆனந்த மாநடம் ஆரும் அறிகிலர்*
*ஆனந்த மாநடம் ஆரும் அறிந்தபின்*
*தானந்தம் அற்றிட ஆனந்த மாமே" - (திருமந் - 2750)*

என்ற பாடலில் குறிப்பிடப்பட்டிருப்பது தெரியவருகிறது.

**முடிவுரை :**

இன்றைய உலகில் பகுத்தறிவுக் கொள்கைகள் வேரூன்றி நிற்கத் தவறியதாலும், மனித சமுதாயம் பழமையில் மூழ்கிக் கிடப்பதாலும், மக்களிடையே மூடநம்பிக்கைகள் மண்டிக் கிடப்பதாலும் - மதக்கலவரங்களும், பிரிவினை வாதங்களும் தலைவிரித்தாடுகின்றன. இதனால் அசம்பாவிதங்களும், அமைதியின்மையும், பொருளாதாரப் பேரிழப்பும் ஏற்படுகின்றன. இத்தகைய செயல்முறைகளுக்கு அடிப்படையாக உள்ள குலவேறுபாட்டையும், சாத்திரத்தையும், பேராசையினையும், ஒழுக்கக்கேட்டினையும் நீக்கிவிட்டு அன்புடையவராய் வாழவேண்டும் என்பதையே திருமூலர் கூறும் தீர்வுகளில் இருந்து நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்'' என்பதால் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி வாழ்ந்தால் உலகில் எந்தச் சிக்கலும் ஏற்படுவதில்லை. ஆதலால் தீர்வுகளும் தேவைப்படுவது இல்லை. ஆயினும் இன்றைய காலகட்டத்தில் மக்கள் சமுதாயம் அன்புடைமையை மறந்து தான்தோன்றித் தனமாகச் செயல்படுவதால் ஏற்படுகின்ற சிக்கல்களுக்குத் திருமூலர் தமது திருமந்திரத்தில் கூறியுள்ள தீர்வுகள் இன்றும் பொருத்தமானதாக உள்ளன.

# இடுக்கண் வருங்கால் நகுக

- மோ. கோ. கோவைமணி

இன்பம், துன்பம் ஆகிய இவ்விரண்டும் வாழ்வின் இரு கூறுகள். இன்பமே வாழ்வாகக் கொண்டவரும் துன்பமே வாழ்வாகக் கொண்டவரும் எவருமேயில்லை. இவ்விரண்டும் ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து மாறிமாறி வருவன. ஒருவன் இன்ப துன்பங்களுக்கு எவ்வாறு ஆட்படுகின்றான் என்பதைக் கொண்டே அவனுடைய மன நிலையை நிர்ணயம் செய்துவிடலாம். இன்பத்தின் போது துன்பம் வருவதும்; துன்பத்தின் போது இன்பம் வருவதும் இயல்பு. இவ்விரு நிலைகளின் போதும் மனிதனின் மனநிலை எவ்வாறு அமைகிறதோ அதற்குத்தக்கபடி அவனது பெருமைகளை இவ்வுலகம் பேசும். திருவள்ளுவப் பெருந்தகை 'இடுக்கண் வருங்கால் நகுக' என்கிறார். இதனை வைத்துப் பார்க்கும்போது துன்பம் வரும்போது அத்துன்பத்திற்கு ஆட்படாமல் உளம் மகிழ்தலாக இருக்க வேண்டும். துன்பத்தை உடல் பெற்றாலும் உளம்பெறாது காத்தலே இதன் சிறப்பு. இத்தன்மை பன்னிரு திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையான பெரியபுராணத்தில் எவ்வாறெல்லாம் இருக்கிறது என இக்கட்டுரை ஆய்கிறது.

**இடுக்கண் செயல்**

பெரியபுராணத்தில் இடம்பெற்ற நாயன்மார்களின் பெருமைகளை இறைவன் இரண்டு நிலைகளில் வெளிப்படுத்துகின்றார். ஒன்று, நேர்காணல் மூலம் பரிசோதிக்கப்பட்டு அடியார்களது பெருமையினை உலகுக்கு அறிவித்து ஏற்றல்; மற்றொன்று, நேர்காணலே இல்லாமல் அவரது பெருமையினை உணர்ந்து ஏற்றல். இதில் முதல் நிலை அடியார்களையே இறைவன் உள்ள நிலையில் இருந்து தாழ்த்தி உய்த்துணரச் செய்து உலகம் உய்யும் பொருட்டு உயர்த்திக்காட்டியுள்ளார். இவ்வகையில், பலர் உளரேனும் அவ்வகையினரையெல்லாம் ஆயின் ஆய்வு விரியும். எனவே, சிலரின் உளமகிழ்வை மட்டுமே இங்குக் காணமுடிந்தது.

**1. அரிவாட்டாய நாயனார்**

மிக்க செல்வத்து வேளாளர் குலத்தோன்றலாய்த் தாயனார் பிறந்தார். அவர் சிவபெருமானுக்கு ஏற்றன என்று செந்நெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் நாள்தோறும் கொண்டு வந்து திருவமுது

செய்விப்பாராய் இருந்தார். இதுவே, இவர்தம் தொண்டாகக் கொண்டிருந்தார். செல்வம் மிக்க காலத்துச் செய்துவந்த இத்திருப்பணி வறுமையுற்ற போழ்தும் தொடரலானார். மிக்க செல்வந்தராய் இருந்த தாயனார் நெல்லறுக்கும் வேலை செய்தார். செந்நெல் அறுத்து வரும் கூலியை இறைவர்க்குத் திருவமுதாக்கிப் படைத்தும், கார்நெல்லறுத்து வரும் கூலியைத் தாமும் உண்டு வரலானார். இந்நிலை நீண்டநாள் நீடிக்கவில்லை. இதிலும் மாற்றம் ஏற்பட்டது. வயல்களிலெல்லாம் நல்ல நீண்ட செந்நெல்லே விளைந்தன. தமக்கில்லையாயினும் இறைவர்க்குப் படைக்கவாவது கிடைத்ததே என்று உளம் மகிழ்வாராயினார். இதனைச் சேக்கிழார்,

*"இந்த நன்னிலை இன்னல்வந் தெய்தினும்*
*சிந்தை நீங்காச் செயலின் உவந்திட"* *(அரிவாட்டாய. 7)*

என்கிறார். தொடர்ந்து செந்நெல்லே கூலியாகக் கிடைக்க அவற்றையெல்லாம் இறைவர்க்கே அமுதாக்கிப் படைத்து வந்தார். வீட்டுத் தோட்டத்தில் விளையும் கீரை வகைகளை மட்டுமே தாம் உணவாகக் கொண்டார். அதுவும் தீர்ந்து போகவே தண்ணீர் குடித்து வாழ்ந்து வந்தார். இவ்வளவு துயர வறுமை வந்த போழ்தும் தாயனாரின் கொள்கையில் மாற்றங் கொண்டிலர். அப்போதும் செந்நெல்லறுத்த கூலியை இறைவர்க்கே அமுது படைத்து வந்தார். இவர்தம் உச்சகட்ட வறுமையைச் சேக்கிழார்,

*"போதரா நின்றபோது புலர்ந்துகால் தளர்ந்து தப்பி*
*மாதரார் வருந்தி வாழ்வார் மட்கல மூடு கையால்*
*காதலால் அணைத்தும் எல்லாம் சமரிடைச் சிந்தக் கண்டு*
*பூதநா யகர்தம் தொண்டர் போவதங் கினியேன் என்று"*

*(அரிவாட். 15)*

கூறுகிறார். தங்களுடைய நாடி முற்றிலும் தளர்ந்தபோழ்தும் இறைவர்க்கு அமுது படைக்கச் செல்லும் மனத்திடம் இங்கு வெளிப்படுகிறது. தனக்குப் பிறகே தானம் தருமம் என்பர். உண்பதற்குகந்த உணவு கையில் இருந்தும் கொண்ட கொள்கையில் நின்ற தாயனார் அது இறைவர்க்கானதே ஒழிய நமக்குரிமை இல்லாதது என்றவராய் நின்ற தன்மை புலப்படுகிறது. இதனால் இவர்க்கு வறுமைதான் - துயரந்தான் எனினும் அவ்வறுமையும் துயரமும் ஊனுக்கேயன்றி உளத்திற்கில்லை என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்.

## 2. இளையான்குடி மாற நாயனார்

இவர், தம்முன் வரும் சிவனடியார்கள் யாவரேனும் அவர்களை எதிர்கொண்டு தமது மனைக்கு அழைத்துவந்து பாதம் விளக்கி ஆசனத்திலமர்த்திப் பூசித்து நான்கு வகையாலும் அறுசுவையாலும் அமைந்த நல்ல உணவை ஊட்டிவந்தார். இவ்வாறு ஒவ்வொரு நாளும் அடியார்கள் வந்து மகேசுவரபூசை கொண்டு மகிழ்ந்து வாழ்த்திச் சென்றதின் பயனாகச் செல்வங்கள் பலபெற்று வாழ்ந்து வந்தார்.

செல்வம் மிக்க காலத்தே செய் நதான இத்திருப்பணியை வறுமைக்காலத்தும் இத்திருப்பணியில் சிறிதும் குறைவு நேரிடாதவாறு செய்துவந்தார். இதற்காகத் தம்மிடமிருந்த பொருள்களையெல்லாம் விற்றொழித்தார். பொருள்கள் எல்லாம் தீர்ந்து போகவே கடன்கள் பெற்றுத் திருப்பணியைச் செய்தார். அடியார்க்கு மகேசுவர பூசை செய்வதாகக் கொண்ட கொள்கையில் மாற்றம் சிறிதும் பெறாதவராக வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் மழைக்காலம், நள்ளிரவு நேரம், உண்பதற்கு உணவும் உறக்கமும் இன்றி, வேறு ஆதரவும் இன்றி மனையில் இருந்தபோழ்து இறைவன் அடியார்போல் வேடம்பூண்டு நாயனார் மனையடைந்தார். இந்நிலையிலும் நாயனார் அவரை எதிர்கொண்டு அழைத்து திருமேனியை ஈரம்போக்கி ஆசனம் தந்து அமரச்செய்து அவர்க்கு உணவு ஊட்ட எண்ணினார். வீட்டில் ஒரு குன்றிமணி நெல்லோ அரிசியோ இல்லை. அவரே மிக்க வறுமையில் உணவும் உண்ணாதிருக்கிறார். இந்நிலையில் அடியாரை எப்படி உபசரிக்க முடியும்? கொண்ட கொள்கையில் நழுவ அவர் எண்ணம் இடம் தரவில்லை. இன்று அடியார்க்கு அமுது படைக்கும் வழிமுறையையே கண்டார். நீதிமுறை வழுவாத தன் மனையாளுடன் ஆலோசனை செய்யலுற்றார். இறுதியாக,

*"செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்*
*மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்*
*வல்ல வாறமு தாக்கலும் ஆகும்"* **(இளையான்குடி. 13)**

என்ற முடிவுக்கு வருகின்றார். விதைச் செந்நெல்லை எடுத்து வந்து அமுதாக்குதல் என்பது கருவிலேயே குழந்தையை அழித்தது போலல்லவா ஆகும். தமக்கு உணவு உண்பதற்கு இல்லாத போழ்து தோன்றாத இவ்வுணர்வு அடியார்க்கு உணவு சமைத்தே ஆகவேண்டும் என்ற கடப்பாடு ஏற்படும் போது இவர்களுக்குத் தோன்றியிருக்கிறது. எவ்வகையான துயரம் வந்திட்டபோதிலும் அவற்றை உளமகிழ்ந்து ஏற்று

உற்ற வகையான் செயலாற்றும் திறனை இளையான்குடி மாற நாயனாரிடம் காணமுடிகிறது.

## 3. மானக்கஞ்சாற நாயனார்

அரனடியார்களே தம்மையும் தமது உடைமைகளையும் உடையவர்களென்று உணர்ந்து, அவர்களுக்கே ஏவல் செய்யும் தொழில் புரிந்து, அவர்கள் வேண்டுவனவற்றைக் கூறுவதன் முன் குறிப்பறிந்து செய்துவந்தவர் மானக்கஞ்சாறனார். இறைவன் திருவருளினாலே நீண்ட நாட்களுக்குப் பிறகு அழகிய பெண்பிள்ளைக்குத் தந்தையானார். சீரோடும் சிறப்போடும் அப்பெண் குழந்தையை வளர்த்து வந்தார். மிகவும் வளர்ச்சி அடைந்து உரிய வயதில் மணப்பருவம் அடைந்தாள். அவளுக்கு மணம் செய்ய எண்ணி ஏயர்கோனுக்கு நிச்சயம் செய்தார்கள் பெரியோர். மானக்கஞ்சாறனாரது திருமனையிலும் நகரிலும் மண அலங்காரங்கள் சீரோடும் சிறப்போடும் செய்திருந்தனர். ஏயர்கோனாரும் தமது சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்திருந்தார். திருமணம் இனிதே நிறைவேறும் என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருந்த வேளையில் இறைவன் மாவிரதமுனிவராக வேடங்கொண்டு திருமணப் பந்தலுள் நுழைகிறார். மானக்கஞ்சாறனார் அவரை எதிர்கொண்டு அழைத்து வந்து இங்கு நடப்பனவற்றைக் கூறுகிறார். உளம்மிக மகிழ்ந்த நாயனார் மணக்கோலத்தில் நின்ற தன்னருமை மகளை அழைத்து வந்து அடியவரின் திருவடியில் பணியச் செய்கிறார். இவ்வேளையில் அடியார் தமக்கொன்று இவ்விடம் வேண்டும் என்றார். என்னவென உரைப்பீராகில் ஏதுவாய் இருக்கும் என்ன, அடியார்,

> *"மஞ்சுதழைத் தெனவளர்த்த மலர்க்கூந்தல் புறம்நோக்கி*
> *அஞ்சலிமெய்த் தொண்டரைப் பார்த்தணங்கிவள்தன் மயிர்நமக்குப்*
> *பஞ்சவடிக் காம்என்றார்"*
> *(மானக்கஞ். 29)*

இதனைக் கேட்ட மானக்கஞ்சாறனார் சற்றும் தயக்கம் கொள்ளாமல் மணக்கோல அலங்காரத்தில் இருக்கும் தன் மகளின் கூந்தலை அரிந்தார். இதனைச் சேக்கிழார்,

> *"அருள்செய்த மொழிகேளா அடற்சுரிகை தனைஉருவிப்*
> *பொருள்செய்தாம் எனப்பெற்றேன் எனக்கொண்டு பூங்கொடிதன்*
> *இருள்செய்த கருங்கூந்தல் அடியில்அரிந் தெதிர்நின்ற*
> *மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடைநீட்ட"*
> *(மானக்கஞ். 30)*

என்கிறார். மணக்கோலத்தில் இருக்கும் மகளின் மணக்கூந்தலை அரிதல் என்பது எல்லையில்லா துயரந் தருவனவாகும். நல்ல செயல் நடந்து

கொண்டிருக்க அச்சமயம் ஒருகேடு நிகழுமாயின் அதனையே முதலாகக் கொண்டு மகளின் வாழ்வு கெடுப்பாரும் உண்டு. இவ்வெவற்றையும் கருத்தில் கொள்ளாது இறைத்தொண்டில் இத்துயரச் செயல் அவருக்கு உளமகிழ்வாகவே இருந்திருக்கிறது. தன்னிடம் உள்ளதையே அடியார் கேட்டார் எனப் பூரிப்பும் கொள்கிறார்.

## 4. சிறுத்தொண்ட நாயனார்

தீதில் குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கையுடன் ஒத்த கருத்துடன் சிறுத்தொண்டர் மனைவாழ்வு வாழ்ந்து வந்தார். நாள்தோறும் சிவனடியார்களை முறைமைப்படி முன்னர்த் திருவமுதூட்டிப் பின்னரே தாம் உண்ணும் நிலையினை நித்த நியமமா கக் கைக்கொண்டு ஒழுகி வந்தார். இப்படியே செய்துவருங்கால் இறைவர் பயிரவர் வடிவுதாங்கிச் சிறுத்தொண்டர் மனைப்புகுந்தார். அன்று அமுதுண்ண அடியார் எவருமில்லாது கவலையுற்றிருந்தவருக்கு இவரின் வருகை பேரின்பத்தைத் தந்தது. பயிரவர் உடனே உணவு உண்ண மறுத்துத் தாம் உண்பது பற்றிக் கூறுகிறார். இதனைச் சேக்கிழார்,

*"நண்பு மிக்கீர்! நாம் உண்ணப் படுக்கும் பசுவும் நரப்பசுவாம்;*
*உண்ப தஞ்சு பிராயத்துள் உறுப்பில் மறுவிண் றேல்இன்னம்*
*புண்செய் நோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வ*
*தொன்றென்றார்" (சிறுத்தொண்.50)*

மேலும்,

*"ஒருகுடிக்கு நல்ல சிறுவன் ஒருமகனைத்*
*தாதை யரியத் தாய்பிடிக்கும் பொழுதில் தம்மில் மணமுவந்தே,*
*ஏதும் இன்றி அமைத்தகறி யாம்இட் டுண்பது"*
*(சிறுத்தொண். 51)*

என்கிறார். இதனைக் கேட்ட சிறுத்தொண்டர் அப்படியேயாகட்டும் என்று அமுது செய்விக்க விடைபெற்றுச் செல்கின்றார். பயிரவரின் எண்ணப்படி எத்தந்தையும் தாயும் உடன்படமாட்டார் என உணர்ந்த சிறுத்தொண்டர் திருவெண்காட்டு நங்கையுடன் கலந்தாலோசித்துத் தம்குலம் தழைக்க உதித்த குலக்கொடியையே பயிரவரின் உணவுக்குப் பக்குவப் படுத்துகின்றார்.

குலம் தழைக்கவந்த குலக்கொடிக்கு உடம்பில் சிறு காயம்பட்டாலே பெருந்துயரம் கொள்ளும் நாட்டினரிடையே தம் மகனையே தாய் மடியிருத்தித் தந்தையரிந்து சமைக்கும் செயல் எத்தகைய கொடுமை. இக்கொடுமைக்குச் சற்றும் இடம்கொடுக்காத சிறுத்தொண்டன் கொண்ட

கொள்கையில் நின்று பிள்ளைக்கறி சமைத்தார். இக்கொடுமையினையும் ஓரளவு சகித்துக் கொண்டாலும் அடியாருடன் அன்னப் பகிர்வுக்கு இன்னொரு சிவனடியாராகத் தானே உண்ண அமர்வது இது அதனினும் கொடுமையன்றோ.

இச்செயலையெல்லாம் சிவச்செயலாகவே கருதிய சிறுத்தொண்டருக்குத் துன்பமாகப் படவில்லை. இத்துன்பச் செயலைக் கொடுமையான இச்செயலை உளமகிழ்வுக்கு ஒவ்வாத செயலையும் இவர் உளமகிழ்வோடு செய்தமை உலகம் போற்றும் செயலாகும்.

### 5. கண்ணப்ப நாயனார்

இவர், இறைவன் மீது ஆறாத பேரன்பு கொண்டிருந்தார். மாமிசப் படையல் இறைவர்க்குப் படைக்கலாகாது என்ற உணர்வற்றிருந்த திண்ணனார் தாம் உண்ணும் வகையெல்லாம் இறைவரும் உண்ணும் தன்மையினர் என்று எண்ணியிருந்தார். நியமம் இல்லாத இவரின் பூசை முறைகளையும் இறைவன் ஏற்றுக்கொண்டார். இவரின் பூசை முறையில்லாததைக் கண்ட சிவகோசரியார் வெகுண்டார். அன்பின் மேலெல்லை காரணமாகத் திண்ணனார் செய்கிறார் என்பதை உணர்த்துவதற்காக ஒருநாள் சிவபெருமானின் திருக்கண்ணில் குருதியை வடிக்கின்றார். இதனைக் கண்ட திண்ணனார் மருந்துகொண்டு குணப்படுத்த எண்ணுகிறார்; முடியவில்லை. 'உற்றநோய் தீர்ப்ப தூனுக்கூனெனும்' உரையை உணர்ந்தவராய் தன்னுடைய ஒரு கண்ணைப் பெயர்த்து இறைவனுக்கு அப்பினார். குருதி நின்றது; ஆனந்தக் கூத்தாடினார். சற்று நேரத்தில் மற்றொரு கண்ணிலும் குருதி பாய்ந்தது. இப்பொழுது சற்றும் யோசியாமல் அடுத்த கண்ணைப் பெயர்த்து இறைவனுக்கு அப்ப முயற்சி செய்கிறார். இதனைச் சேக்கிழார்,

> *"கண்டபின் 'கெட்டேன்! எங்கள் காளத்தி யார்கண் ஒன்று*
> *புண்டரு குருதி நிற்க மற்றைக்கண் குருதி பொங்கி*
> *மண்டுமற் றிதனுக் கஞ்சேன் மருந்துகை கண்டேன்; இன்னும்*
> *உண்டொரு கண்;அக் கண்ணை இடந்தப்பி ஒழிப்பேன்' என்று"*
>
> *(கண்ணப். 180)*

என்கிறார். இந்த மனப்பான்மை திண்ணனாராகிய கண்ணப்பருக்கன்றி வேறுயாருக்கு வரும். கண்ணைப் பெயர்த்துக் கொடுத்தல் என்பது மானிடரால் இயலாத செயல். தன்னுடைய கண் பெயர்ப்பதால் ஏற்படும் துன்பத்தை அவர் எண்ணவில்லை; ஒருகண் பெயர்த்த பிறகு அதில் ஏற்படும் வலியையும் குருதி வடிவதையும் எண்ணியும் பார்க்க அவருக்கு மனமில்லை; இறைவர்க்கு அடுத்த கண்ணிலும் குருதி பாயவே உற்ற

உபாயம் செய்யத் துணிகிறார். தன் துன்பத்தைப் பெரிதுபடுத்தாமல் இறைவன் துன்பத்தை உணர்ந்த கண்ணப்பரின் உளமகிழ்வு இங்கு எண்ணத் தக்கதாகும்.

## 6. அதிபத்த நாயனார்

பரதவக் குலத்தோன்றலான அதிபத்தர், சிவபெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டவராகத் திகழ்ந்தார். கடலிலே சென்று மீன் பிடிக்கும் தொழிலில் வல்லவராகத் திகழ்ந்து மிகுந்த செல்வந்தராகவும் வாழ்ந்து வந்தார். இவர் தம் தொழில் ஒரு நெறியைப் பின்பற்றி வந்தார். இதனைச் சேக்கிழார்,

*"பட்ட மீன்களில் ஒருதலை மீன்படு தோறும்*
*நட்ட மாடிய நம்பருக் கெனநளிர் முந்நீர்*
*விட்டு வந்தனர் விடாதஅன் புடனென்றும் விருப்பால்"*

*(அதிபத்த. 11)*

எனக் கூறுகின்றார். சிலநாள் கடலில் மீன்கள் அதிகம் கிடைக்காததால் தொழிலில் மந்தம் ஏற்பட்டது. அப்பொழுதும் தம் கொள்கையில் இருந்து வழுவாமல் கிடைத்த மீன்களில் தலையாய மீனை இறைவனுக்காகக் கடலலையில் விட்டுவந்தார். தம் செல்வங்களையெல்லாம் இழக்கும் நிலை ஏற்பட்டது. பிறகு ஒரேயொரு மீன் மட்டுமே தினந்தினம் கிடைக்கத் தொடங்கியது. அப்பொழுதும் தாம்கொண்ட கொள்கையில் வழுவாமல் கிடைத்த அவ்வொரு மீனையும் கடலலையில் விட்டுவந்தார். ஒருநாள், செஞ்சுடர் உதித்ததுபோல் உலகெலாம் வியக்கத்தக்க மீன் ஒன்று மட்டுமே கிடைத்தது. இவ்வொரு மீனே இவ்வுலகை வாங்கும் செல்வம் தரத்தக்கது. ஆனால், நெறி தவறாது வாழ்ந்த அதிபத்தர்,

*"பொன்திரட்சுடர் நவமணி பொலிந்தமீன் உறுப்பால்*
*ஒன்றும் மற்றிது என்னையா ளுடையவர்க் காகும்*
*சென்று பொற்கழல் சேர்கெனத் திரையொடுந் திரித்தார்"*

*(அதிபத்த. 17)*

இச்செயல் யாருக்கே வரும். தமக்கு எவ்வளவுதான் துன்பங்கள் நேரினும் தன் சிந்தையில் வேறு மாற்று எண்ணங்கள் புகாதபடி காத்த அதிபத்தரின் உளத்தை எப்படிப் பாராட்டுவது.

## 7. கலிய நாயனார்

திருவொற்றியூரில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் திருக்கோயிலின் 'உள்ளும், புறமும், அல்லுநெடும் பகலும் இடுந் திருவிளக்கின் அணிவிளை'விக்கும் தொழிலைச் சிரமேற் கொண்டு

செய்துவந்தார் கலியநாயனார். தம்முடைய செல்வமெல்லாம் தேய்ந்தழிந்த பின்னையும் இத்திருப்பணியில் 'பேராத பேராளர், வருமரபில் உள்ளோர்பால் எண்ணெய்மா றிக்கொணர்ந்து, தருமியல்பிற் கூலியினால் தமதுதிருப் பணிசெய்வார்'. இப்படியாகத் திருப்பணி செய்து வந்தபோது, கூலி வேலை செய்யவும் நெருக்கடி நேரிட்டுவிட்டது. பணிசெய்வார் பலராயினர்; திருவிளக்கேற்ற எண்ணை பெறமுடியாத நிலை வந்துற்றது. எல்லாப் பொருள்களையும் இழந்த கலியநாயனார், தன்னுடைய மனைவியை விற்கத் துணிந்தார். இழிவான இச்செயலை எவரும் ஏற்பாரில்லை. எந்நிலையிலேனும் திருவிளக்கேற்ற எண்ணியவர்,

*"மணிவண்ணச் சுடர்விளக்கு மாளில்யான் மாள்வன்"* *(14:3)*

எனத் துணிகிறார்.

*"திருவிளக்குத் திரிஇட்டங் ககல்பரப்பிச் செயல்நிரம்ப*
*ஒருவியஎண் ணெய்க்கீடா உடல் உதிரங் கொடுநிறைக்கக்*
*கருவியினால் மிடறரிய"* *(15)*

முற்படுகின்றார் கலிய நாயனார். இச்செயல் அவரின் உள்ளத் தெளிவைப் புலப்படுத்துகிறது. எத்துன்பம் வரினும் மனைவியை விற்றேனும் திருவிளக்கேற்ற வேண்டும் என்ற துணிவு எவர்க்கும் எளிதில் வாராது. அப்படி வரின் அவர் துன்பத்தில் உளம்மகிழும் பேராண்மை பெற்றவராகத்தான் இருக்கமுடியும். இப்பண்பு கலியநாயனாரிடம் காணமுடிகிறது.

## 8. மூர்த்தி நாயனார்

மதுரை, திருஆலவாயிலில் கோயில் கொண்டிருக்கும் சொக்கலிங்கப் பெருமானின் திருமேனிக்குத் தினமும் மெய்ப்பூச்சுக்குச் சந்தனக்காப்பு அரைத்துக் கொடுக்கும் திருப்பணியை என்றும் வழுவாமல் செய்துவந்தார் மூர்த்தி நாயனார். சமணர் நாட்டைக் கைப்பற்ற சைவர்தம் திருப்பணிகளுக்குச் சமணர்கள் இன்னல்கள் பல செய்யத் தலைப்பட்டனர். இவ்வின்னல்களுக்கு மூர்த்தி நாயனாரும் உட்பட்டார். இவரது திருப்பணியான சந்தனம் அரைத்துக் கொடுக்கும் பணியில் ஊறுகள் பல செய்தனர். எங்குமே சந்தனக்கட்டைகள் கிடைக்காதவாறு செய்துவிட்டனர். வருந்தினார் மூர்த்தியார். இதற்கு என்ன தீர்வு காண்பது என யோசித்தவர்,

*"நட்டம்புரி வாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று*
*முட்டும்பரி சாயினுந் தேய்க்குங்கை முட்டா தென்று*

*வட்டந்திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்*
*கட்டும்புறந் தோல்நரம் பென்பு கரைந்து தேய"* *(மூர்த்தி. 20)*

செய்தார். இத்துணைத் துணிவு அவருக்கு எப்படி வந்தது? இறைவன் மீது கொண்ட பற்றும், கொண்ட கொள்கையில் வழுவாமையுமேயாகும். தன்னுடல் துயருற்றாலும் திருக்காப்புக்குச் சந்தனம் அரைத்துக் கொடுத்தேயாக வேண்டும் என்ற மனத்துணிபால் தன் உடலுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் பெரிதுபடுத்தாமல் மனதிற்கு ஏற்படும் இன்பத்தையே பெரிதாக நாடினமை இங்குப் புலப்படுகின்றது

## 9. அப்பூதியடிகள்

*"வடிவுதாங் காணா ராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்*
*அடிமையுந் தம்பி ரானார் அருளுங்கேட் டவர்நா மத்தால்*
*படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா யுள்ள*
*முடிவிலா அறங்கள் செய்து"* *(அப்பூதி. 3)*

அப்பூதியடிகள் வாழ்ந்து வந்தார். ஒருநாள் அப்பூதியடிகள் மனையகத்தே தாம்போற்றும் இறைத்தொண்டர் திருநாவுக்கரசர் வந்தது கண்டு பெரும் மகிழ்வுற்றிருந்தார். 'தேசம் உய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்'படிக் கேட்டுக்கொண்டு 'தூயநற் கறிகளான அறுவகைச் சுவையில் ஆக்கி'ய பிறகு தம் குலக்கொடியான இளம்திருநாவுக்கரசை வாழை இலைக்குருத்தைக் கொண்டுவா எனப் பணித்ததுமே, உளம் மகிழ்வால் இளங்குருத்து வாழையிலையைக் கொண்டுவர தோட்டத்துக்குச் செல்கின்றான். இலையைப் பறித்ததுமே அரவம் தீண்டுகிறது. விடம் வேகமாக முந்த, அதற்கும் முன்னர் திருநாவுக்கரசர்க்கு அன்னம் பரிமாறத் தேவையான வாழையிலையில் மாசு பட்டுவிடக் கூடாது என்ற எண்ணத்தவனாய், தன்னை அரவம் தீண்டியதையும் பெரிதுபடுத்தாமல்,

*"எரிவிடம் முறையே ஏறித் தலைக்கொண்ட ஏழாம் வேகம்,*
*தெரிவுற எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீந்து*
*விரியுரை குழறி ஆவி விடங்கொண்டு மயங்கி வீழ்வான்,*
*பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான்"* *(27)*

தனக்கிட்ட செயல் எதுவாயினும் அதை எத்துயர் வந்திடினும் நிறைவேற்றும் இச்சிறுவனின் மனவுறுதியை இங்குக் காண்கிறோம். இதற்கும் மேலே ஒருபடி உயர்ந்து போகிறார் அப்பூதியார்,

*"பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுட் பெய்து மூடிப்*
*புறமனை முன்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே,*
*அறிஇது தெரியா வண்ணம் அமுதுசெய் விப்போம்"* *(29)*

என்ற எண்ணம் கொண்டு செயலாற்றுகின்றார். எல்லையில்லாத் துயரம் பெற்றிருந்தாலும் வாராது வந்த திருத்தொண்டர்த் திருநாவுக்கரசருக்கு அமுதளிப்பதில் ஊரு நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக உளமகிழ்வாகச் செய்த இச்செயலை என்னென்று சொல்வது.

## முடிவு

1. இவ்வொன்பது நாயன்மார்களன்றி இன்னும் பலர் இடுக்கண் வருங்கால் நகுதலைச் செய்திருக்கின்றனர்.
2. ''ஈர அன்பினர் யாதும் குறைவிலார்'', ''ஈண்டுவரும் துயருளவோ ஈசன் அடியார்க்கு'', ''நடுக்கம் கெடுப்பது நமச்சிவாயமே'' எனும் இம்மூன்று பொன்மொழிகளைத் தன்னகத்தே கொண்டிருந்ததால் தான் இவர்களால் தமக்கேற்பட்ட துயரினைப் பெரிதுபடுத்த முடியவில்லை.
3. இன்றைய சமுதாயத்திற்கு இந்தக் கருத்துக்கள் ஒப்பாகுமா என்று பார்க்கும்போது, ஒரு குடும்பத் தலைவன் தன்குடும்பம் நல்வழிப்பட வேண்டுமாயின், தான் பல இடர்களையும் அனுபவித்து அதனை வெளிக்குக் காட்டாமல் குடும்பத்தில் உள்ளோர் கூட அறியாதபடி அனுசரித்துச் செல்லவேண்டும். இல்லையேல் குடும்பம் இடர்ப்படுவது உறுதி. எனவே இக்கருத்துக்கள் இன்றைய சமுதாயத்திற்கு மட்டுமல்ல என்றைக்கும் உகந்ததே என்று உறுதியாகக் கூறலாம்.
4. மக்களின் உயர்வுக்குப் பெரியபுராணம் வழிவகுக்கிறது எனலாம். அதாவது, கொண்ட கொள்கையில் வழுவாமலும் தனக்கிட்ட பணியில் இடர்நேராவண்ணம் காத்தலும் செய்தாலே வாழ்வில் மேன்மை தானாக வரும் என்பதுண்மை.
5. பொதுவாகப் பெரியபுராணத்தில் அடியார்களின் செயல்களை மக்கட் தலைவர்தம் செயல்களாகவும் இறைவனின் செயல்களை மக்களின் செயல்களாகவும் உற்றுநோக்கினால் 'அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழியே' என்ற கூற்று உறுதிப்படும்.

# புதுக்கவிதைகளில் பொருள் விளங்காமை

- பேரறிஞர் ஏ. ஆதித்தன்

இருபதாம் நூற்றாண்டைய புதுக்கவிதைகள் சில அவற்றைப் பயில்வோருக்குப் புரிந்து கொள்வதில் சிக்கலை ஏற்படுத்தியமையால் இதற்கான காரணங்களைக் கண்டறியும் முயற்சியாக இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

இவ்வாய்விற்குப் பத்து கவிஞர்களின் கவிதைகள் தெரிவு செய்யப்பெற்று அவை ஆய்வாளர் உள்ளிட்ட பதினைந்து வாசகர்களுக்கு வழங்கப்பெற்று அவர்கள் இப்பத்தினுள் மிகவும் கடினமானவை என்று தெரிவு செய்த பசுவையாவின் 'நடுநிசி நாய்கள்' அபியின் 'மௌனத்தின் நாவுகள்' எனும் இரு கவிதை நூல்களும் தரவுகளாகக் கொள்ளப்பெற்றுள்ளன.

இக்கவிதை நூல்களில் காணப்பெறும் கவிதைகளின் கருப்பொருள் சமகாலச் சமுதாயத்தின் வாழ்வியல் சிக்கல் பற்றியதாக இருந்தபோதும் இவற்றின் மொழியமைப்பே பொருள் விளங்காமைக்கான அடிப்படைக் காரணம் என்பதனையே கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற புதுக்கவிதைகளில் மொழிஅமைப்பினைக் கண்டறிந்து அது எவ்வெவ் நிலைகளில் மக்கள் பயன்பாட்டு மொழியிலிருந்து பிறழ்ச்சி அடைந்துள்ளது என்பதனைக் கண்டறியும் நிலையில் பொருள் விளங்காமைக்கான அடிப்படைக் காரணம் தெரியவரும்.

மொழியமைப்பினை ஒலியன் நிலை, உருபன் நிலை, தொடர்நிலை, பொருள் நிலை ஆகிய நான்கு நிலைகளில் விவரித்தல் இயலும். எனினும் இக் கட்டுரையில் உருபன்நிலை, பொருள்நிலை ஆகிய இருநிலைகளின் அடிப்படையிலே ஆய்வு முடிவுகள் தரப்பெற்றுள்ளன.

**சொல்தேர்வு**

கவிஞர் தன்னுடைய கருத்தினைச் சுட்டுவதற்குத் தெரிவுசெய்யும் சொற்கள் நிகழ்காலப் பயன்பாட்டுமொழியில் அமைந்து காணப்பெறாமையால் இவற்றைப் பயில்வோர் சொற்பொருளைக் கண்டறிவதில் இடர்ப்படுகின்றனர்.

கவிஞர்கள் சொற்பொருள் விளக்கத்தினை மொழிப் பொருண்மையியல் (linguistic semantics) அடிப்படையில் தெரிவு செய்யாமல் தருக்கப் பொருண்மையியல் (logical semantics), தத்துவப் பொருண்மையியல் (philosophical semantics) அடிப்படையிலும் தெரிவு செய்வதால் பொருளைப் புரிந்து கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பலவிடத்து இக்கால மொழியின் பயன்பாட்டில் இல்லாத, வழக்கிறந்த சொற்கள் (obsolete words) பலவற்றைப் பயன்படுத்தியுள்ளமையால் இவற்றின் பொருளைக் கண்டறிவதில் வாசகர்கள் இடர்ப்படுகின்றனர்.

(எ-டு) யாளி, ...ரி, பிரக்ஞை, ஏகாந்தம்

மேலும் இக்கவிஞர்கள் பல அருகிய வழக்குச் சொற்களையும் (archaic words) கவிதைகளில் கையாண்டுள்ளனர். இச்சொற்களும் பொருளைப் புரிந்து கொள்வதில் சிக்கலை உருவாக்கியுள்ளன.

(எ-டு) யுகம், ...ம, ரோமம், நிசி, சதுப்பு.

அனைத்துப் படைப்பிலக்கியவாதிகளும் தமது வட்டார வழக்குகளைத் தமது படைப்புக்களில் பயன்படுத்துவது உண்டு. எனினும் இக்கவிஞர்கள் பெரும்பான்மையான அளவு வட்டார வழக்குகளைப் (dialectal forms) பயன்படுத்துவது பொருளைப் புரிந்துகொள்ளத் தடையாக அமைந்துள்ளது ஈண்டுப் ... பசுவையாவின் வட்டார வழக்குகள் மட்டுமே கள ஆய்வின்வழி கண்டறியப் பெற்றமையால் அவரது கவிதைகளில் மட்டுமே காணப்பெறும் வட்டார வழக்குச் சொற்கள் குறிப்பிடப்பெறுகின்றன.

(எ-டு) கெக்கலிக்கும், பம்மி, உன்னி, கருக்கு இருட்ட, தெவங்க.

கால்பாவா, குறும்மை, மண்ணாந்தை போன்றவை

பிறமொழிச்சொற்களைத் தேவைகருதியும் (need filling motive), உயர்வுநோக்கம் கருதியும் (prestige motive) கடன்வாங்குவது உண்டு. இக்கவிஞர்களின் கவிதைகளில் ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற இருவகை நோக்கம் கருதியும் அமையப்பெற்ற கடன்சொற்கள் பெரிதும் காணப்பெறுவதால் இவை வாசகர்களின் புரிதிறனைப் பெரிதும் குறைக்கின்றது.

(எ-டு) அபோதம், பிரவாஹம், ஏகாந்தம், கூபிஸம், லக்ஷம், இம்பிரஷனிஸம், பிளேஜியாரிஸை

இக்கவிஞர்களின் படைப்புக்களில் கருத்துக்கடன் (loan shift) ஒன்பது விழுக்காடுகள் காணப்பெறுகின்றன.

(எ-டு) சாந்த சூரியன், கவிதை நீரோடை.

பெரும்பாலும் பிறமொழிச் சொற்களைத் தவிர்க்க வேண்டும் எனும் எண்ணம் மேலோங்கும் நிலையில் கருத்துக்கடன்களின் உருவாக்கம் பெரிதும் காணப்பெறும். ஆனால் இவர்களது கவிதைகளில் கருத்துக்கடன் *மிகக்குறைந்த அளவுதான் காணப்பெறுகின்றது*.

சிலவிடத்துக் கலப்புக்கடனும் (loan blend) காணப் பெறுகின்றது. வடமொழி வடிவத்தையும் தமிழ்வடிவத்தையும் இணைத்து இவை உருவாக்கப்பட்டுள்ளன.

(எ-டு) கானங்கிள், மௌன வார்ப்பு

கடன்பெறும் சொற்களைச் சீர்மையின்றிக் கவிஞர்கள் தமிழாக்கம் (adaptation) செய்வதால் அச்சொற்கள் பிறர் தமிழாக்கம் செய்வதிலிருந்து மாறுபட்டமைவதால் அவற்றை வாசகர்கள் எளிமையாகப் புரிந்து கொள்வதில்லை.

(எ-டு) ஸ்புரித்தது, ஸ்வயத்தின்

தமிழில் நுண்பொருளை உணர்த்தும் பெயர்வடிவங்களும் தொகுதிப்பெயர் (mass nouns) வடிவங்களும் பன்மை உருபினை ஏற்பதில்லை. இக்கவிதைகளில் நுண்பொருட்பெயர்கள் பல பன்மை உருபுகளை ஏற்றுவருகின்றன. இவ்வழக்காறுகள் வாசகர்களுக்குப் புதியனவாக அமையப்பெறுவதால் இவை குறிப்புப் பொருளை உணர்த்துவதாகவும் அவற்றைத் தங்களால் கண்டறிய இயலவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(எ-டு.) நிச்சயங்கள், வழக்கங்கள், சாயைகள், கானங்கள் முதலியன.

நிலைபேறாக்கம் பெறா வினைச்சொற்கள் பல இக்கவிதைகளில் கையாளப் பெற்றுள்ளன. இவை பயன்பாட்டுமொழியில் காணப்பெறாமையினால் இவற்றைப் புரிந்துகொள்வதில் வாசகர்கள் இடருறுகின்றனர்.

*(எ-டு.) மழை மயிராய் புளகிக்கும்*
*நீ சொட்டிக்கொண்டிருக்கப் போகிறாய்*
*முகம் சலிப்பில் ஸ்புரித்தது*
*சரசத்துக்கும் ஒப்பி*

ஆங்கில மொழியின் தாக்கத்தால் அமையப் பெற்ற புதிய தொகைச் சொற்களின் பொருளைப் பல வாசகர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. ஈண்டுத் தலைச்சொல்லுக்கும் (head) அடைச்சொல்லுக்கும் (attribute) இடையே முறையான முரண் (contrast) அமையப்பெறாமையே சொற்பொருள் கண்டறிவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

*சருகின் சருகுகள்*
*நிழல்களின் நிழல்கள்*
*குடலைக் கசக்கும் கசப்பு*

முற்றிலும் மொழிப்பயனில் அமையாத சொற்களும் கவிதைகளில் அமைந்துள்ளமை பொருள் புலப்பாட்டைச் சிதைக்கின்றது.

*கருமொக்கில் கௌதுகம் காட்சி*
*என்னில் வில்லிட்ட பழைய காலம்*

பலபொருள் ஒரு சொற்களின் பொருள் தடுமாற்றம் (ambiguity) சூழலால் தீர்க்கப் பெறாமையால் கவிதையில் சில சொற்களின் பொருளைக் கண்டறிவதில் சிக்கல் காணப்பெறுகின்றது.

*அரைமுடிக்குட்டிகள் அதிசயம் பார்த்துநிற்க*
*நீ சொன்ன படிக்கு நான் இங்கு வந்து*

ஒருபொருள் பல சொற்களைப் பொறுத்தமட்டிலும் இக்கவிதைகளில் பெரும்பாலும் அடிப்படைப்பொருளைச் சுட்டாத ஒருபொருள் பலசொல் (non-neutral synonym) பயன்படுத்தப்பெறுவது வாசகர்களுக்குப் பொருள்விளங்குவதில் தடையாக அமைகின்றது.

காரணச்சொற்களின் பயன்பாடு கவிதையில் அருகிக் காணப்படுகின்றது. பயன்படுத்தப்பெறும் மூன்றுவகையான காரணச்சொற்களில் பெரிதும் காணப் பெறுவது பொருண்மைநிலையில் அமைந்த காரணச்சொற்கள் (semantically motivated words) என்பதால் இவை பிறவகைக் காரணச்சொற்களைப் போன்று எளிமையாகப் பொருள் விளங்குவதில்லை.

இக்கவிதைகளில் பொதுமொழியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட பொருளுடைய குழுச்சொற்களும் (slangs), பயன்படுத்தப் பட்டுள்ளமையால் இச்சொற்கள் வருகைதரும் கவிதையின் அடிப்படைப் பொருளை வாசகர்களால் கண்டறிய இயலவில்லை.

(எ-டு.) புண், மணி, அரைமுடிக் குட்டிகள்.

கவிஞர்கள் தமது கவிதைகளில் மென்பொருட்பேறு, வன்பொருட்பேறு, நுண்பொருட்பேறு, பருப்பொருட்பேறு, இடக்கரடக்கல், மங்கலம், பாமர ஆக்கம், உருவகம், உயர்பொருட்பேறு, இழிபொருட்பேறு போன்ற பல்வேறு வகையான பொருண்மை மாற்றங்களின் (semantic changes) அடிப்படையில் அமையப்பெற்ற சொற்கள் பல கையாண்டுள்ளனர்.

இப்பொருண்மை மாற்றங்களை அறிமுகம் செய்யக் கவிஞர்களுக்கு முழுச்சுதந்திரம் உண்டு. ஒவ்வொரு படைப்பிலக்கிய வாதியும் இச்சுதந்திரத்தினைப் பயன்படுத்தும் முறையினைப் பொறுத்தே மொழிநடையும் பொருள் புலப்பாடும் அமையப்பெறுகின்றன.

பொருண்மை மாற்றங்கள் இருசொற்கள் அன்றி இவை உணர்த்தும் பொருள்களுக்கிடையே காணப்பெறும் ஒப்புமை (similarity) அன்றித் தொடர்பு (congiguity) காரணமாக நடைபெறுதலுண்டு. சான்றாகக் 'காளை' என்பது ஒருவலிமையுடைய மனிதனைச் சுட்டும் நிலையில் 'காளை', 'மனிதன்' இவ்விருசொற்கள் சுட்டும் சொற்பொருண்மைக்கிடையே காணப்பெறும் ஒப்புமையே பொருண்மை மாற்றத்திற்கு அடிப்படையாக அமைகின்றது.

இவ்வொப்புமை முறையாக அமையும் நிலையில் உவமை சிறப்பாக அமையப்பெறும். இதனைப் போன்றே உருவகம் போன்ற பிறவகைப் பொருண்மை மாற்றங்களும் முறையாக அமைந்தால் கவிதையினைப் பயில்வோர் சொற்களை எளிமையாகப் புரிந்துகொள்வர்.

பொருண்மை மாற்றங்கள் நடைபெற்ற சொற்களைக் கவிதை பயில்வோர் எளிமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் பொருண்மை மாற்றம் நடைபெறும் சொற்களுக்கிடையே அன்றி இவை உணர்த்தும் சொற்பொருளுக்கிடையே ஒப்புமை அன்றித் தொடர்பு முறையாக அமைந்திடல் வேண்டும்.

வலிமையுடைய மனிதனைச் சுட்டுவதற்குக் 'காளை' என்பதற்குப் பதிலாகப் 'பாம்பு' என்பதனைப் பயன்படுத்தினால் படைப்பிலக்கியவாதி குறிப்பிட விரும்பிய பொருளை வாசகர்களால் முழுமையாகப் புரிந்துகொள்ளுதல் இயலாது.

மேலும் நுண்பொருளை உணர்த்தும் சொல்லைப் பருப்பொருள் உணர்த்தும் சொல்லாகப் பாவித்தலும் அதற்கேற்பத் தொடராக்கம் செய்வதும் இக்கவிஞர்களிடம் காணப்படுகின்றது.

இத்தகைய புத்தாக்கங்கள் கவிஞர் கூற விரும்பிய பொருளைப் புலப்படுத்துவதில் முழுமை பெறவில்லை.

அடிப்படைப் பொதுப்பொருள் (denotative meaning), குறிப்புப் பொருள் (Connotative meaning) ஆகிய இரண்டின் சேர்க்கையே ஒரு சொல்லின் அகராதிப் பொருளாகும். சொல்லின் குறிப்புப்பொருள் சமுதாயத்திற்கேற்ப, காலத்திற்கேற்ப, தனிமனித உணர்விற்கேற்ப மாறுபடுவது உண்டு. அடிப்படைப் பொதுப்பொருள் எந்நிலையிலும் மாறுவதில்லை.

ஈண்டுக் கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் இடம்பெறும் சொற்களில் சேர்க்கப்பெறும் குறிப்புப்பொருள் வாசகர்களுக்குப் பெரிதும் அறிமுகமில்லாதிருப்பதால் பொருளைப் புரிந்துகொள்வதில் மிகவும் இடருறுகின்றனர். குறிப்புப் பொருள்தான் வாசகர்களின் இலக்கியச் சுவைப்புக்கு அடிப்படையானது. இதனைச் சொற்களில் அறிமுகம் செய்யும்நிலையில் அது சொற்பொருள் பரப்பிற்கு அப்பாற்பட்டு அமைதல் கூடாது.

தான் கூற விரும்பியதை தன் எழுத்துக்களின் வாயிலாகப் பயில்வோரைச் சென்றடையச் செய்வதே ஒரு எழுத்தாளரின் நோக்கமாகும். இதற்கு அடிப்படையாக அமைவது அவன் பயன்படுத்தும் மொழியாகும். குறிப்பாகப் படைப்பாசிரியர் அறிமுகம் செய்யும் பொருள் மாற்றங்களும், குறிப்புப் பொருளும் முறையாக அமையும் நிலையில் அவரது படைப்பு முழுமைபெறும்.

இக்காலக் கவிஞர்கள் பலர் தனிமனிதப் பயன்பாட்டு மொழிக்கூறுகளை இலக்கிய உத்திகளாகப் பயன்படுத்துவதால் இவர்களது கவிதைகளை வாசகர்களால் எளிமையாகப் புரிந்துகொள்ள இயலவில்லை.

# துங்கபுரக் கல்லெழுத்துக்கள்

- பேரறிஞர். ஆர்.கே. அழகேசன்

திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த சிற்றூர் துங்கபுரம். இவ்வூர் திட்டக்குடி வெள்ளாற்றங்கரையில் இருந்து 14 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. வெள்ளாற்றின் வடகரை தென்னார்க்காடு மாவட்டமாகவும் தென்கரை திருச்சி மாவட்டமாகவும் பாகுபடுத்தப்பட்டுள்ளது. துங்கபுரத்தின் மறுபெயர் சிறுமருதை. இ யர் சிறுமதுரை என்பதன் மரூஉ.

மதுரைப் பாண்டிய மன்னன் இவ்வூரை வென்றடக்கியதன் நினைவாகச் 'சிறுமதுரை' எனப் பெயரிட்டு மதுரைக் கோயிலின் அமைப்புக்கேற்றவாறு இக்கோயிலையும் ஊரையும் சமைத்தனன். பாண்டியனை மீண்டும் வென்ற சோழன், சிறுமதுரைக்குத் தம் பெயரைச் சூட்டிக் 'குலோத்துங்க சோழபுரம்' என்று மாற்றினன். அதுவே இன்று துங்கபுரமாக வழங்கப்படுகிறது.

ஓர் ஊருக்கு ஏற்கனவே ஒரு பெயர் இருந்தபோதும் வென்றடக்கியதன் நினைவாக மீண்டும் பெயர் மாறிய வரலாறு தமிழகத்தின் ஊர்ப் பெயர்களில் பரக்கக் காணலாம். சமயநாட்டம், வெற்றியின் நினைவு, ஆட்சி மாற்றம் ஆகிய முக்கிய சம்பவங்களால் இப்பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். இளங்கோய்க்குடி, மன்னார்குடி, பிரமதேசம், ஊர்க்காடு, இராஜராஜ சதுர்வேதிமங்கலம் என்ற பெயர்களே பிற்காலத்தில் 'அம்பா சமுத்திரம்' என்று மாற்றப்பட்டது போலச் சிறுமதுரையும் துங்கபுரமாயிற்று. மதுரையின் இறைவி - இறைவன் திரு நாமங்களே சிறு மருதைக் கோயிறைவர்க்கும் சூட்டப்பட்டுள்ளன.

**கல்வெட்டு வரிகள்**

மீனாட்சி என்னும் பெயர் அம்மனுக்கும் சுந்ரேசுவர் என்னும் திருநாமம் சுவாமிக்காகவும் குறிக்கப்பட்டுள்ளன. ஊரமைப்பும் கோயிலமைப்பும் ஒன்றாய்க் கருதத்தகும். இவ்வூரினுள் சோழர் காலக் கல்வெட்டும் பாண்டியரின் மீன் சின்னமும் காணக் கிடைக்கின்றன. பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில்,

*"புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப"*

என்னும் மெய்க்கீர்த்தி வடிவம் காணப்படுகிறது. இவ்வரி, முதற்குலோத்துங்கனின் அடிகளாகும். குலோத்துங்கனின் பெயரால் அமைக்கப்பட்ட ஊரினும் கோயிலிலும் தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் உள்ளன. இவ்வூருக்கு அருகில் இரண்டு கிலோமீட்டர்

தொலைவில் உள்ள ஊர், கோவில்பாளையம், சோழனின் 11 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுக்கள் கோயிலின்கண் உள்ளன.

கோயில்பாளையம் தொலீஸ்வரர் ஆலயத்தின் கோபுரமும் திருமாளிகையும் சோழவரசால் கட்டப்பட்டன.

*''ஸ்வஸ்தி ஸ்ரீ துங்க நாடுடையாந் திருசடை*
*ஆரிய பாதன் செய் திருக் கோபுரமும் திரு*
*மாளிகையும் செய்வித்தது''*
*''ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள்*
*மதுரை கொண்டருளிய குலோத்துங்க சொழ*
*தெவர்க்கு யாண்டு பதினொன்றாவது''*

என வரும் கல்வெட்டுச் சான்றுகளால் குலோத்துங்கனின் இலங்கை வெற்றி, ஆரியபாதன் என்பவனது முயற்சியால் திருக்கோபுரமும் உள்மாளிகையும் எழுப்பப்பட்ட வரலாறு முதலியன புலப்படும். அவை ஏறக்குறைய குலோத்துங்கனின் 11வது ஆட்சியாண்டில் நிகழ்ந்தன. தஞ்சைக் கோயிலெழுப்பிய குஞ்சர மல்லனைக் கல்வெட்டுப் பொறிப்புகள் காட்டியன போல் ஆரியபாதனைக் கோவில்பாளையக் கல்வெட்டுக் குறித்துள்ளது.

**தீர்த்தக்குளத் திருத்தலம்**

கல்வெட்டின் துணையால் இவ்வூர் ''திருத்தலம்'' என்றும் ''வாழுவூர் உடையார்க்கு வுண்ணாயர்க்கு உபயம் பண்ணி திர்த்த குளம்'' என்றும் அறிய முடிகிறது. இக்கல்வெட்டு வரிகள் அமையப் பெற்ற வடக்குச் சுவரில் இரண்டு மீன் உருவங்கள் காணப்படுகிறது. எனவே பிற்காலச் சோழர் காலத்தில் இவ்வூர் புண்ணியத் தலமாகக் கருதப்பட்டது என்பதையும் நற்கருமக் காரியத்திற்கெனக் கோவிலருகில் ஒரு தீர்த்தக்குளம் வெட்டப்பட்டதையும் இதன்வழி நன்கறியலாம்.

இக்கோயிலின் வடக்குச் சுற்றாலயத்தின் வழியாக

*'மாடை 50'*
*'புரவு வரித் திணைக்களம்'*
*'முக வெட்டி'*

என்னும் கல்வெட்டுக் கலைச் சொற்கள் புலப்படுகின்றன. இவை முறையே பொன்னை அளக்க உதவும் எடைக்கருவியாகவும் வரிவாங்கும் நிறுவனமாகவும் வரி செலுத்துவோரின் ஊர் பெயர் பிற விவரங்களை வகைப்படுத்திய தொகுப்பேடு என்பதாகவும் பொருள்படும். தஞ்சை, செம்பியன் மாதேவி, கங்கை கொண்ட சோழபுரக் கல்லெழுத்துக்களில் மேற்குறித்த கலைச்சொற்கள் தென்படுகின்றன. அரசின் வருவாய்த்துறை மிகக் கவனமுடன் இயங்கியது என்பதற்குரிய அடையாளச் சொற்களே

மேற்காட்டிய கல்வெட்டுக் கலைச் சொற்கள். அரசுத்துறையின் வருமானம் குறிக்கப்பட்டாற் போலவே சமய நிகழ்ச்சிகளும் இவ்வூர்க் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

**திருவிழாப் புறம்**

விழாக் காலங்களில் கோயிலில் நிகழ்வுறும் வழிபாடு, விளக்கெரிப்பு, உணவுத் தானங்கள் ஆகியவற்றை ஈடுசெய்ய மக்கள் பலரும் அறக்கொடைகளை ஏற்படுத்தியிருந்தனர். அரசனும், அரசியும், அதிகாரியும், அதிகாரிச்சியுமாக இக்கொடைகளை வழங்கி, அதற்காகும் செலவினங்களுக்காக நிலங்களை மேலதிகமாக உரியவனுக்கு வழங்கினர். இப்படியாக விழா நிகழும் பொருட்டு வழங்கிய நிலக்கொடைகளைத் ''திருவிழாப்புறமென''க் குறித்துள்ளனர். இது சோழர் காலம் முழுக்க நம் நாட்டில் பரவிக் கிடக்கும் பண்பாடெனலாம். இத்தகைய அறக்கொடைகளை நேரிடையாகப் பார்வையிட்ட அரசியின் தொண்டுள்ளத்தைக் கீழ்க்கண்ட வரிகள்

*''ஸ்ரீ மதுரை கொண்டருளிய வடகரை கொண்ட*
*சோழ தேவர்க்கு திருவிழாப் புறத்துக்கு*
*தேவி குலோத்துங்க சோழ திருவாட்டி*
*செய்விச்ச''*

எனக் காட்டியுள்ளன. அரசியின் தொண்டுள்ளமும் மதுரை கொண்டருளிய சோழவரசனின் வெற்றிச் சிறப்பும் தெற்குச்சுவரில் இன்றும் காணலாம்.

கோயிலிறைவர்க்கென அளிக்கப்படும் இவ்வகைக் கொடைகள் பெரும்பாலும் இறையிலியாய் செய்யப்பட்டிருக்கின்றன. அரசு, வரி விதிப்பை மேலுஞ் சுமத்தாமல் இதுபோன்ற நிலக்கொடைகளுக்கு வரிச்சலுகை அளித்தது. இதற்கும் இவ்வூரின் தெற்குச் சுவர்க் கல்வெட்டில்

*''முதல் தவிர்த்து இத்தெவர்க்கு வெண்டும்*
*நிமந்தங்களுக்கு இருப்பதாக இறையிலியாக''*

என்னும் கல்வெட்டு வரிகள் சான்றுக்குண்டு.

**மன்னர் சிலை**

நாட்டிய உருவில் அழகிய விநாயகரும் ஒருகால் தொங்கவிட்டு மறுகால் மேலிட்ட மன்னர் உருவமும் காண்பதற்கு அழகூட்டுகின்றன. கரண்ட மகுடம், சன்னவீரம், குண்டலம், காற்காப்பு ஆகியன தாங்கிய மன்னனின் தோற்றப் பொலிவைக் கண்ணுறும்போது இவ்வுரு, முதற் குலோத்துங்க சோழனாக இருக்கலாமென ஐயமேற்படுகிறது கண்காணிப்பில்லாமல் காணக் கிடைக்கும் இச்சிலையை அடுத்துள்ள இடிபாடுடைய மதிற்சுவரின் அடியில் சோழர்காலச் செப்புக் காசுகள் கிடைத்துள்ளன.

# நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | **குறள் நெறிச் சிந்தனைகள்** |
| ஆசிரியர் | - | **புலவர் நா. பசும்பொற்கிழார்** |
| வெளியீடு | - | கற்பகம் புத்தகாலயம் |
| விலை | - | ரூ.15 |
| பக்கங்கள் | - | 77 |

திருக்குறளில் அறத்துப்பாலில் வரும் அறங்கள் பலவற்றையும் தொகுத்தும் வகுத்தும் இந்நூலில் விளக்கம் செய்துள்ளார். மேலும் பொருட்பாலிலும் பல குறள்கள் அறச்சார்பு உடையனவே என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில குறட்பாக்களுக்கும் புதிய பொருள் கண்டுள்ளார். இது சிந்தனைக்கு உரியது; புரட்சிகரமானது. பழைய உரைகளை மறுத்துச் சில குறள்களுக்குப் பொருத்தமான பொருள் கண்டுள்ளது பாராட்டத் தகும். ''அறததாறு இது என வேண்டா'' என்ற குறளுக்கு இவர்தரும் விளக்கம் பொருத்தமாக உள்ளது. புதிய சிந்தனை - அறத்தில் ஆழமான நம்பிக்கை இந்நூலாசிரியர் கொண்டுள்ளார். கொல்லாமையே உயர்ந்த அறம் என்பது இவரது துணிபு.

சிந்தைக்கு விருந்தளிக்கும் இச்சீரிய நூல் ஆய்வாளர்க்கும் மாணவர்க்கும் பயன்படும்.

வளர்க ஆசிரியரின் உரையாக்க முயற்சி

*- நா. பாலுசாமி*